

அத்தியாயம் 3

# மத்திய வங்கிக் கொள்கைகளின் மீளாய்வு

## சுருக்கம்

2025இல் மத்திய வங்கிக் கொள்கைகள் விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை நிலைநிறுத்தியதனூடாக உயர்வான மற்றும் நிலைபேறான பொருளாதார வளர்ச்சிக்கான ஆக்கபூர்வமான சூழலுக்கு ஆதரவளித்தது. மேயில் ஓரிரவு கொள்கை வீதத்திற்கான கீழ்நோக்கிய சீராக்கத்துடன், 2023 நடுப்பகுதியில் தொடங்கிய மத்திய வங்கியின் நாணயத் தளர்வு சுழற்சி வட்டமானது 2025 முழுவதும் தொடர்ந்தது. உள்நாட்டு பணச் சுருக்க நிலைமைகள், நன்கு நிலைநிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகள், வலுவற்ற உலகளாவிய கேள்வி, மற்றும் நடைமுறையிலுள்ள வர்த்தகத்துடன் தொடர்புடைய நிச்சயமற்றத்தன்மைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு, இக்கொள்கை நிலைப்பாடு தொடர்ந்தும் பேணப்பட்டது. மத்திய வங்கியின் கணிசமானளவிலான தேறிய வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவுகளால் பாரியளவில் ஆதரவளிக்கப்பட்டு, ஆண்டுக்காலப்பகுதி முழுவதும் பணச் சந்தை திரவத்தன்மை மிகையாகக் காணப்பட்டது. மேம்பட்ட திரவத்தன்மை நிலைமைகளுடன், 2025 சனவரி இறுதியிலிருந்து மத்திய வங்கியானது திரவத்தன்மையினை உள்ளீர்க்கின்ற திறந்த சந்தை தொழிற்பாடுகளை இடைநிறுத்தியது. ஒட்டுமொத்த நாணய நிலைமைகளின் தளர்வானது, வட்டி வீதங்களின் பரந்தளவிலான வீழ்ச்சிகளுக்கும் தனியார் துறை கொடுகடனின் வலுவான வளர்ச்சிக்கும் ஆதரவளித்த அதேவேளை, 2025 ஓகத்து மாதத்திலிருந்து பணவீக்கம் நேர்கணிய புலத்திற்கு திரும்பலடைந்தது. எனினும், 2025இன் இரண்டாம் அரையாண்டில், குறிப்பாக டித்வா புயலுக்கு பின்னர், பங்கேற்பு நிறுவனங்களுக்கிடையில் ரூபாவின் திரவத்தன்மையின் சமச்சீரற்ற பரம்பல் மற்றும் அதிகரித்த அரசாங்க நிதியிடல் தேவைகள் என்பவற்றின் காரணமாக, குறுங்கால சந்தை வட்டி வீதங்களில் தற்காலிக அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இதற்கு மத்தியிலும், ஒட்டுமொத்த மிகை திரவத்தன்மையையும் தனியார் துறை கொடுகடனின் தொடர்ச்சியான வளர்ச்சியையும் கருத்திற்கொண்டு, மத்திய வங்கியானது சந்தைக்குள் திரவத்தன்மையை உள்ளீர்ப்பதிலிருந்து விலகியது. 2026இன் முற்பகுதியில், ரூபாய் திரவத்தன்மை மேலும் சீராக பரம்பலாக்கப்பட்டதால், குறுங்கால வட்டி வீதங்கள் கீழ்நோக்கி சீராக்கம் செய்யப்பட்டன. 2024இன் இரண்டாம் அரையாண்டிலிருந்து பணவீக்க வீதமானது 5 சதவீத இலக்கிற்கு கீழ் 2 சதவீதப் புள்ளிகளுக்கு அதிகமாக காணப்பட்டதால், மத்திய வங்கியானது, பணவீக்க இலக்கினை எய்தத் தவறியமைக்கான காரணங்கள், மத்திய வங்கியினால் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பரிகார நடவடிக்கைகள், அத்துடன் பணவீக்க இலக்கு எக்காலவரையறையினுள் எய்தப்படக்கூடுமோ அக்காலவரையறையின் ஒரு மதிப்பீடு என்பனவற்றை எடுத்துரைத்து, 2025இல் பாராளுமன்றத்திற்கு நான்கு அறிக்கைகளை சமர்ப்பித்து அவற்றை பொதுமக்களுக்கு கிடைப்பனவாக்கி, இதன் மூலம் மத்திய வங்கியின் வெளிப்படைத்தன்மையையும் பொறுப்புக்கூறுந்தன்மையையும் உறுதி செய்தது.

நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீதக் கொள்கையைப் பேணிய அதேவேளை, மத்திய வங்கியானது வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகளினூடாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை தொடர்ச்சியாக மீள்கட்டியெழுப்பியது. மேம்பட்ட வெளிநாட்டுத் துறை நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, 2020 முதல் நடைமுறைப்படுத்தப்பட்ட பல்வேறு மூலதன பாய்ச்சல் முகாமைத்துவ வழிமுறைகளை மத்திய வங்கி தளர்த்திய அதேவேளை, மோட்டார் வாகனங்கள் உள்ளடங்கலாக இறக்குமதி கட்டுப்பாடுகளை முழுமையாக தளர்த்துதல் மீதான அவதானிப்புகளையும் பரிந்துரைகளையும் அரசாங்கத்திற்கு வழங்கியது. வாகன இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமையானது விரிவடைந்த வர்த்தக பற்றாக்குறைக்கு பங்களித்த போதிலும், 2025இல் அரசிறையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பினை விளைவித்தது.

பேரண்ட முன்மதியுடைய அதிகார சபை எனும் வகையில், மத்திய வங்கியானது உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளுக்கான கட்டமைப்பினை இற்றைப்படுத்தியதனூடாகவும் வாகனக் கடன்களிற்கான மிகையான வெளிப்படுத்துகையை கட்டுப்படுத்துவதற்கு பெறுமதிக்கான கடன் விகித்தை திருத்தியமைத்ததனூடாகவும் நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்குந்தன்மையை முன்னேற்றியது. மத்திய வங்கியானது உரிமம்பெற்ற வங்கிகளுக்கான பல்வேறு முன்மதியுடைய ஒழுங்குவிதிகளை வெளியிட்டு, வலுவான தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவத்தையும் இணையப் பாதுகாப்புத் தயார்நிலையையும் வலியுறுத்தியது. வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் மீட்சித் திட்டங்களை தயாரிக்க வங்கிகள் தேவைப்படுத்தப்பட்டன. மத்திய வங்கியானது, நிதிக் கம்பனிகளுக்கு மேம்படுத்தப்பட்ட திரவத்தன்மை மற்றும் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ பணிப்புரைகளினூடாக ஒழுங்குமுறைப்படுத்தலை இறுக்கமாக்கி, நிலைப்பெறத்தக்க வியாபார நடைமுறைகளை ஊக்குவிப்பதற்கு வைப்பு மற்றும் படுகடன் சாதன வீதங்கள் மீது உச்சவரம்புகளை விதித்த அதேவேளை, ஒன்றிணைக்கும் முதன்மைத் திட்டத்தின் கட்டம் IIஇன் கீழ் கண்காணிப்பையும் தொடங்கியது. நுண்பாக நிதிக் கம்பனிகள், மத்திய வங்கியினால் வலுப்படுத்தப்பட்ட கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டு, அதிகாரமளிக்கப்படாத வைப்பினை ஏற்கும் நிறுவனங்களுக்கு எதிராக நடைமுறைப்படுத்தல் வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. அதேவேளை, மத்திய வங்கியானது 2025இன் இறுதியில் கடந்த காலங்களில் வங்கி கையாண்ட பொதுப் படுகடன் முகாமைத்துவ தொழிற்பாடுகளை பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்திற்கு சுமூகமாக மாற்றுவதற்கு வசதிப்படுத்தி, இறை மற்றும் நாணயப் பொறுப்புக்களுக்கிடையிலான நிறுவனம்சார் புரிதலை மேம்படுத்தியது.

மத்திய வங்கியானது, நிதியியல் வசதிக்குட்படுத்தலை மேம்படுத்தும் நோக்கில், பாடத்திட்டங்களை உருவாக்க கல்விசார் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் என்பவற்றுடன் பங்காளராகியது. கொடுப்பனவுகள் தோற்றவமைப்பில், மத்திய வங்கியானது கட்டணக் குறைப்புகள், அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு வரையறைகள் மற்றும் LANKAQR இன் மேம்பட்ட உலகளாவிய பொருந்தக்கூடியத்தன்மை என்பவற்றினூடாக எண்ணியல் (டிஜிட்டல்) கொடுக்கல்வாங்கல்களை ஊக்குவித்தது. சட்ட சீர்திருத்தங்கள் மற்றும் இலங்கையின் எதிர்வருகின்ற பரஸ்பர மதிப்பீட்டுக்கான தயாரிப்புக்கள் என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, பணம் தூயதாக்கலுக்கெதிரான, பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை தடுத்தல், மற்றும் ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தலை தடுத்தல் முன்னெடுப்புக்கள் தொடர்ச்சியாக முன்னேற்றமடைந்தன. மத்திய வங்கியானது, கொள்கை இடைவெளிகளை மதிப்பீடு செய்ததனூடாகவும், நிதியியல் நுகர்வோர் பாதுகாப்பு கட்டமைப்பினை சர்வதேச சிறந்த நடைமுறைகளுடன் அணிசேர்த்ததனூடாகவும், நிறுவனம்சார் இயலாற்றலை மேம்படுத்தியதனூடாகவும் 2025இல் நிதியியல் நுகர்வோர் பாதுகாப்பினை வலுப்படுத்தியது. மத்திய வங்கியானது, அனைத்து நிதியியல் நிறுவனங்களுக்குமான தீர்மான ஏற்பாடுகளை விரிவுபடுத்தியதனூடாக வைப்புக் காப்புறுதி மற்றும் தீர்மானக் கட்டமைப்பை மீளவலுப்படுத்தி, தீர்மான தயார் நிலையை வலுப்படுத்துவதற்கு சுயாதீன தொழில்சார் விலைமதிப்பீட்டாளர்கள் குழுமத்தினை நிறுவியது. மேலும், 2025இல் நிலைபெறத்தக்க நிதி வழிகாட்டல் 2.0 அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், நிதியியல் துறை நடவடிக்கைகளுக்குள் காலநிலை மற்றும் சமூகப் பரிசீலனைகளை ஒருங்கிணைப்பதில் மத்திய வங்கியின் அர்ப்பணிப்பானது சமிக்ஞைப்படுத்தப்பட்டது.

ஒட்டுமொத்தமாகப் கருதுகையில், மத்திய வங்கி மூலம் செயல்படுத்தப்பட்ட கொள்கை நடவடிக்கைகள் அதன் நோக்கங்களான உள்நாட்டு விலை உறுதிப்பாட்டை பேணுதல் மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டை பேணுதல் என்பவற்றை நிறைவேற்றுவதற்கு உதவின. வழங்கல்பக்க காரணிகளின் செல்வாக்கிற்குட்பட்டிருந்தது. 2025இல் வழங்கல்பக்க விலை சீராக்கங்களால் முதன்மையாக தூண்டப்பட்ட பணச்சுருக்கத்தை பணவீக்க இலக்கு நோக்கி வழிநடத்தும் வகையில் கொள்கைகள் கவனமாக ஒழுங்குபடுத்தப்பட்டன. தொடர்ச்சியான தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகள் பொருளாதார நடவடிக்கை இயல்புநிலைக்கு திரும்புவதற்கு ஆதரவளித்து பலமான தனியார் துறை கொடுகடன் விரிவடைதலை செயற்படுத்தியது. பல்வேறு ஆர்வலரருடனான தொடர்ச்சியான கலந்துரையாடல்கள், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறுந்தன்மையை வலுப்படுத்துவதற்கான மத்திய வங்கியின் முயற்சிகள், நாணயக் கொள்கை மற்றும் அதன் செயற்பாடுகள் குறித்த புரிதலை மேம்படுத்துவதில் பயனுள்ளதாக இருந்துள்ளன என்பதைக் காட்டுகின்றன. கணிசமான சவால்களுக்கு மத்தியிலும் நிதித்துறை மீள்திறனுடன் விளங்கியமை நிதி அமைப்பின் தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மையைப் பாதுகாப்பதில் மத்திய வங்கியின் பங்கைப் பிரதிபலிக்கிறது.

## 3.1 நாணயக் கொள்கைக் கட்டமைப்பு

**2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் உள்நாட்டு விலை உறுதிப்பாட்டை அடைதலும் பேணுதலும் மத்திய வங்கியின் முதன்மைக் குறிக்கோளாக காணப்படும் அதேவளை, நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பினுள் நாணயக் கொள்கை நடாத்தப்படுகின்றது.** இம்முதன்மைக் குறிக்கோளை அடையும்பொருட்டு, மத்திய வங்கிச் சட்டமானது நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பிற்கிசைவாக நாணயக் கொள்கையை வகுப்பதற்கும் நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த செலாவணி வீதக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதற்கும் மத்திய வங்கிக்குக்குப் பொறுப்பாணையளிக்கின்றது. நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பானது, நிதி அமைச்சருக்கும் இலங்கை மத்திய வங்கிக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கிடல் மட்டங்களில் பணவீக்கத்தை பேணுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. 2023 ஒத்தோபர் 5ஆம் திகதியன்று அரசாங்க வர்த்தமாணிப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட தற்போதைய நாணயக் கொள்கை கட்டமைப்பு உடன்படிக்கையானது, 5 சதவீதம் கொண்ட இலக்கில் காலாண்டு முதன்மைப் பணவீக்கத்தை பேணுவதற்கு மத்திய வங்கிக்கு பொறுப்பாணையளிக்கின்றது. மேலும், இலக்கிலிருந்து அடையப்பட்ட பணவீக்கத்தின் சாதகமான விலகலை அளவிடவும், பொறுப்புக்கூறல் நோக்கங்களுக்காகவும், நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையில் எல்லையாக ±2 சதவீத புள்ளிகள் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**பணவீக்க இலக்கினை அடைவதற்காக, மத்திய வங்கியானது குறுகியகால சந்தை வட்டி வீதங்களை விரும்பிய பாதைக்கு வழிநடாத்துவதற்காக அதன் கொள்கை சாதனங்களை பயன்படுத்துகின்றது.** 2024 நவெம்பரில் இரட்டைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறையிலிருந்து ஒற்றைக் கொள்கை வட்டி வீதப் பொறிமுறைக்கு நிலைமாறுதலடைந்ததிலிருந்து, ஓரிரவு கொள்கை வீதமானது அதன் கொள்கை நிலைப்பாட்டை சமிக்ஞைப்படுத்துவதற்காக, மத்திய வங்கியின் முக்கிய நாணயக் கொள்கை கருவியாக செயற்படுகின்றது. குறுங்கால பணச் சந்தை வட்டி வீதமான சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பண வீதமானது, நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ் தொழிற்பாட்டு இலக்காக செயற்படுகின்றது. ஓரிரவு கொள்கை வீதமானது குறிப்பிட்ட கால இடைவெளியில் மீளாய்வு செய்யப்பட்டு, தேவையேற்படின், குறுங்கால வட்டி வீதங்களை வழிநடாத்துவதற்கு, மத்திய வங்கியின் நாணயக் கொள்கை சபையினால் சீராக்கம் செய்யப்படுகின்றது. ஓரிரவு கொள்கை வீதம் அறிவிக்கப்பட்டதன் பின்னர், நிலவும் மற்றும் எதிர்பார்க்கப்படும் உள்நாட்டு திரவத்தன்மை நிலைமைகளை கருத்தில் கொண்டு, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பண வீதத்தை அறிவிக்கப்பட்ட ஓரிரவு கொள்கை வீதத்தில் அல்லது அதனை அண்மித்துப் பேணுவதற்கு மத்திய வங்கி அதன் நாணய தொழிற்பாடுகளை நடாத்தி ஒழுங்குப்படுத்துகின்றது. ஓரிரவு சந்தை வட்டி வீதங்கள், இச்செயல்முறையினூடாக நாணயக் கொள்கை நிலைப்பாட்டுடன் அணிசேர்ந்து, நிதியியல் சந்தைகளினூடாக பரந்தளவிலான பொருளாதாரத்திற்கு பரிமாற்றப்பட்டு, இறுதியாக பணவீக்கத்தில் தாக்கம் செலுத்துகின்றது.

**மத்திய வங்கிச் சட்டமானது, மத்திய வங்கி அதன் பொறுப்பாணையை செயல்திறன்மிக்க வகையில் முன்னெடுப்பதற்கு அதிகளவிலான சுயாதீனத்தை வழங்குகின்ற அதேவேளை, வெளிப்படைத்தன்மையையும் பகிரங்க பொறுப்புக்கூறுந்தன்மையையும் மேம்படுத்துவதற்கு தேவைப்படுத்துகின்றது.** விலை உறுதிப்பாட்டைப் பரிசீலனையில் கொண்டு, மத்திய வங்கியானது நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட பணவீக்க இலக்கினை ±2 சதவீதப் புள்ளிகளின் எல்லைக்குள் தொடர்ச்சியாக இரு காலாண்டுகளில் பூர்த்திசெய்யத் தவறினால் (அதாவது காலாண்டு முதன்மைப் பணவீக்கம் 3.0%-7.0%இற்கு வெளியே காணப்பட்டால்) நிதியமைச்சரினூடாக பாராளுமன்றத்திற்கு அறிக்கையொன்றினைச் சமர்ப்பிப்பதற்கு மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபையை மத்திய வங்கிச் சட்டம் தேவைப்படுத்துவதுடன், அது பொதுமக்களுக்கு கிடைப்பனவாக இருத்தல் வேண்டும். அவ்வறிக்கையானது, பணவீக்க இலக்கினை எய்தத் தவறியமைக்கான காரணங்கள், மத்திய வங்கியினால் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பரிகார நடவடிக்கைகள், அத்துடன் பணவீக்க இலக்கு எக்காலவரையறையினுள் எய்தப்படக்கூடுமோ அக்காலவரையறையின் ஒரு மதிப்பீடு என்பனவற்றை எடுத்துரைக்க வேண்டும். 2024இன் இறுதி மூன்று காலாண்டுப் பகுதியிலும் 2025 காலப்பகுதியிலும்

## சிறப்புக் குறிப்பு 04
## இலங்கையில் நாணய மற்றும் இறைக் கொள்கை ஒருங்கிணைப்பு

பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டைப் பேணுவதிலும் நிலைபெறத்தக்க பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதிலும் நாணய மற்றும் இறைக் கொள்கைகளுக்கிடையிலான செயல்திறன்வாய்ந்த ஒருங்கிணைப்பு முக்கிய பங்காற்றுகின்றது. நாணயக் கொள்கையானது விலை உறுதிப்பாட்டினைப் பேணுவதற்கு மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை உள்ளடக்குகின்ற அதேவேளை, இறைக் கொள்கையானது வரி விதிப்பு, பொதுச் செலவினம் மற்றும் படுகடன் முகாமைத்துவம் என்பன மீதான அரசாங்கத் தீர்மானங்களை ஈடுபடுத்துகின்றது. நாணயக் கொள்கையும் இறைக் கொள்கையும் ஒன்றில் ஒன்று குறைநிரப்புகின்ற அல்லது போட்டியிடுகின்ற குறிக்கோள்களையும் அத்தகைய குறிக்கோள்களை அடைவதற்கு வேறுபட்ட கால வீச்சுக்களையும் கொண்டிருக்கலாம். உதாரணமாக, 2022 பொருளாதார நெருக்கடிக் காலப்பகுதியில் அவதானிக்கப்பட்டவாறு, நாணயக் கொள்கை மற்றும் இறைக் கொள்கை இரண்டும் பொருளாதார உறுதிப்பாட்டினை மீட்டெடுப்பதன் மீது கவனம்செலுத்த வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், சில சந்தர்ப்பங்களில் இக்கொள்கைகளின் குறிக்கோள்கள் மாறுபடலாம். பணவீக்கம் தொடர்பான அச்சுறுத்தல் தோற்றம்பெறுகின்ற போது வட்டி வீதங்களை உயர்த்துவதன் மூலம் நாணயக் கொள்கையானது விலை உறுதிப்பாட்டை முன்னுரிமைப்படுத்த வேண்டியுள்ளது என்பது உடனடி எதிர்காலத்தில் பொருளாதார வளர்ச்சியினை மற்றும் தொழில்நிலை உருவாக்கத்தினை முன்னுரிமைப்படுத்துகின்ற இறைக் கொள்கைக் குறிக்கோள்களுடன் முரண்படலாம். தளர்வான இறைக் கொள்கை மூலம் தோற்றுவிக்கப்பட்ட மிதமிஞ்சிய கூட்டுக் கேள்வியானது பொருளாதாரத்தில் விலை அழுத்தங்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு நாணயக் கொள்கையை இறுக்கமாக்குவதை வேண்டுகின்ற சந்தர்ப்பங்களும் காணப்படலாம். அத்தகைய விலகல்களுக்கு மத்தியில், சுயாதீனம் மற்றும் பொறுப்புக்கூறல் என்பன பற்றி ஒவ்வொன்றினது குறிக்கோள்களுக்கும் மற்றயது உரிய கவனம்செலுத்துகின்ற செயல்திறன்வாய்ந்த நாணய-இறை ஒருங்கிணைப்பானது நீண்டகால உறுதிப்பாடு மற்றும் வளர்ச்சி என்பவற்றை நோக்கிய அதன் பயணத்தில் தேசத்திற்கு சிறப்பாக பணியாற்றுகின்றது.

இலங்கையில், நாணய-இறை ஒருங்கிணைப்பு கடந்த காலத்தில் கணிசமாக படிப்படியாக வளர்ச்சிபெற்றுள்ளது. 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் நாணய மற்றும் இறைக் கொள்கைக்கிடையிலான ஒருங்கிணைப்பு நெருக்கமாக ஒன்றிணைக்கப்பட்டிருந்தது. எனினும், அநேகமான இக்காலப்பகுதியில் இறை ஆதிக்கம் நிலவி, நாணய சுயாதீனத்தை மட்டுப்படுத்தி, பற்றாக்குறை நிதியிடல் தேவைகளுக்கு இடமளிப்பதற்கு மத்திய வங்கியினை அவ்வப்போது வேண்டியது. இக்கட்டமைப்பு 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் (மத்திய வங்கிச் சட்டம்) கீழ் மிகவும் ஆற்றல்மிக்க தெளிவாக வரையறுக்கப்பட்ட நிறுவனசார் ஏற்பாடொன்றிற்கு மாறுதலடைந்துள்ளது. புதிய சட்டக் கட்டமைப்பானது மத்திய வங்கிச் சுயாதீனத்தை வலுப்படுத்தி, பொறுப்புக்கூறலையும் வெளிப்படைத்தன்மையையும் அதிகரித்து, கொள்கைப் பொறுப்பாணைகளைத் தெளிவாக வரைவிலக்கணம் செய்வதுடன் செயல்திறன்மிக்க நாணய-இறை ஒருங்கிணைப்பை வசதிப்படுத்துகின்ற அதேவேளை, பேரண்டப்பொருளாதாரத்தையும் நிதியியல் உறுதிப்பாட்டையும் பாதுகாக்கின்றது.

### இலங்கை மத்திய வங்கிச் சட்டத்திற்கு முன்னர் நாணய மற்றும் இறைக் கொள்கை ஒருங்கிணைப்பு

நாணய விதிச் சட்டம் சட்டமாக்கப்பட்டது முதல், நாணய-இறை ஒருங்கிணைப்பு நாட்டின் நிறுவனசார் கட்டமைப்பினுள் உள்ளடக்கப்பட்டிருந்தது. இலங்கையின் நாணய, நிதியியல் மற்றும் கொடுப்பனவுகள் முறைமைகளின் நிர்வகித்தல், மேற்பார்வை மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் என்பவற்றுக்கான அதிகாரசபையாக மத்திய வங்கியை நாணய விதிச் சட்டம் தாபித்தது. அரசாங்கத்தின் இறைக் கொள்கையுடன் அணிசேர்ந்து நாணயக் கொள்கையைத் தொழிற்படுத்துகின்ற ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பையும் இது வழங்கியது. நிதி அமைச்சின் செயலாளர் மத்திய வங்கியின் நாணயச் சபையில் உள்ளடக்கப்பட்டிருந்தார். மத்திய வங்கி அரசாங்கத்தின் இறை முகவராக, வங்கியாளராக, நிதிசார் ஆலோசனையாளராக குறிக்கப்பட்டிருந்தது. தற்காலிக முற்பணங்கள் வடிவிலும் வேறு கொடுகடன் வடிவங்களிலும் அரசாங்கத்திற்கு நாணய நிதியிடலை வசதிப்படுத்துவதற்கும் நாணய விதிச் சட்டம் மத்திய வங்கியினை அனுமதித்திருந்தது. 1950களிலிருந்து தொடங்கி இறை அதிகாரிகளும் மத்திய வங்கியும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்து, விலை உறுதிப்பாடு மற்றும் தொழில்நிலை என்பவற்றை ஊக்குவிப்பதற்கு நாடிய அதேவேளை பேரண்டப்பொருளாதாரச் சவால்களுக்குத் தீர்வுகாண்பதற்கு ஒருங்கிணைந்து தொழிற்பட்டன. எனினும், இலங்கைப் பொருளாதாரத்தில் அரசிறைப் பற்றாக்குறைகள் தொடர்ச்சியாகவும் பாரியதாகவும் தோற்றம்பெற்ற போது நாணய நிதியிடல் மீதான அதிகளவிலான தங்கியிருப்பு பணவீக்க அழுத்தங்களுக்கும் வெளிநாட்டு சமமின்மைகளுக்கும் பங்களித்தது. இது குறிப்பாக அரசிறை விரிவாக்கம் பொருளாதாரத்தின் ஈர்ப்பு இயலளவினை விஞ்சிச்சென்ற போது காணப்பட்டது. இந்நிலைமை “Unpleasant Monetarist Arithmetic”

(சார்ஜன் மற்றும் வலஸ், 1981)[1] எனும் எண்ணக்கருவிலும் எடுத்துக்காட்டப்பட்டது. இதன்படி, இறை அதிகாரிகள் நிலைபெறத்தகாத பற்றாக்குறைகளை தொடர்ந்தும் கொண்டுசெல்வார்களாயின், பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதை நோக்காகக் கொண்ட இறுக்கமான நாணயக் கொள்கை வலுவிழந்து, இறுதியாக நாணய விரிவாக்கம் ஊடாக இறைப் பற்றாக்குறைகளுக்கு இடமளிப்பதற்கு மத்திய வங்கியினை நிர்ப்பந்தித்து இதன் மூலம் எதிர்கால விலை உறுதிப்பாட்டை பலவீனப்படுத்தும். நாணய விதிச் சட்டமானது கொள்கை ஒருங்கிணைப்பை வசதிப்படுத்திய முறைசார் கட்டமைப்பொன்றினை ஏற்பாடுசெய்த போதிலும், இறை ஆதிக்கத்திற்கு இடமளித்து நாணய நிதியிடல் மீது அதிகரித்தளவிலான இறைசார் தங்கியிருத்தலுக்கும் அனுமதியளித்தது. நாணயக் கொள்கை போதுமானளவில் பாதுகாக்கப்படாமையினால் 2022இல் எதிர்கொண்ட எதிர்பாராத சமூகப் பொருளாதார நெருக்கடிக்கு இக்கட்டமைப்பு சார்ந்த பலவீனம் காரணமாகவிருந்து, இதனூடாக செயல்திறன்வாய்ந்த சுயாதீனத்துடன் இயங்குவதற்கான மத்திய வங்கியின் இயலுமையினை குறைவடையச் செய்தது.

### மத்திய வங்கி சுயாதீனத்தை வலுப்படுத்துவதில் அண்மைக்கால கட்டமைப்பு சார்ந்த மறுசீரமைப்புக்கள்

முன்னைய சட்டத்தினதும் நாணயக் கொள்கைக் கட்டமைப்பினதும் குறைபாடுகளை இனங்கண்டு, சர்வதேச ரீதியில் சிறந்த நடத்தைகளை கருத்திற்கொண்டு நாணய விதிச் சட்டம் இரத்துச்செய்யப்பட்டு இலங்கை மத்திய வங்கிச் சட்டம் 2023 செத்தெம்பரில் அறிமுகப்படுத்தப்பட்டது. இறை ஆதிக்கத்திற்கான வழிகளை மத்திய வங்கிச் சட்டம் கணிசமானளவு மட்டுப்படுத்தி, இதனூடாக மத்திய வங்கியின் தொழிற்பாடு சார்ந்த சுயாதீனத்தை வலுப்படுத்தி, நாணயக் கொள்கையின் செயல்திறன்வாய்ந்த தன்மையினை மேம்படுத்துகின்றது. நேரடி இறைப் பிரதிநிதித்துவத்தைக் கட்டமைப்பு ரீதியாக அகற்றுகின்ற அத்துடன் நாணயக் கொள்கைச் சுயாதீனத்தை வலுப்படுத்துகின்ற மாற்றமொன்றான இலங்கை மத்திய வங்கி ஆளும் சபை மற்றும் நாணயக் கொள்கைச் சபை என்பவற்றிலிருந்து திறைசேரிக்கான செயலாளரை நீக்கியமை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் குறிப்பிடத்தக்க மறுசீரமைப்பாக அமைகின்றது. மத்திய வங்கிச் சட்டம் நேரடி நாணய நிதியிடலைக் கட்டுப்படுத்துகின்ற அதேவேளை குறுங்கால காசுப்பாய்ச்சல் தேவைகளை முகாமைத்துவம் செய்வதற்கு அரசாங்கத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட தற்காலிக முற்பணங்களை அது அனுமதிக்கின்றது. இருப்பினும் மேம்பட்ட இறை ஒழுக்கம் மற்றும் செயலாற்றத்தின் மூலம் அரசாங்கம் 2023இல் மத்திய வங்கிச் சட்டம் சட்டமாக்கப்பட்டதிலிருந்து இவ்வேற்பாட்டை செயலுறுத்தவில்லை. மேற்குறித்தவற்றுக்கு மேலதிகமாக, உலகளாவிய சுகாதார அவசரநிலை போன்ற விதிவிலக்கான சூழ்நிலைகளின் கீழ் பாராளுமன்றத்தில் அனுமதிக்குட்பட்டு நாணய நிதியிடலை இயலச்செய்வதற்கு ஏற்பாடுகள் காணப்படுகின்றன. அதேவேளை, 2024ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க பொது கடன் முகாமைத்துவச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக மத்திய வங்கியிடமிருந்து பொதுப்படுகடன் முகாமைத்துவப் பொறுப்புக்களை பொது கடன் முகாமைத்துவ அலுவலகத்திற்கு கைமாற்றுதல் என்பது நாணயக் கொள்கையை நடாத்துவதில் மத்திய வங்கியின் நிறுவனசார் சுயாதீனத்தை மேலும் அதிகரிக்கின்றது. மத்திய வங்கிச் சட்டத்துடன் சேர்த்து 2024ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டத்தை இயற்றியமை இறைசார் ஒழுக்கத்தினை குறிப்பிடத்தக்களவு வலுப்படுத்தி இதனூடாக நாணய-இறைக் கொள்கை ஒருங்கிணைப்பின் செயல்திறனை மீள் வலுப்படுத்தியது. 2024 ஓகத்தில் சட்டமாக்கப்பட்ட பகிரங்க நிதிசார் முகாமைத்துவச் சட்டமானது வரவுசெலவுத் திட்டச் செயன்முறைக்கு தெளிவான கட்டமைப்பொன்றினைத் தாபிப்பதன் மூலம் இறை ஆளுகை மறுசீரமைப்புக்களின் தளமாகப் பணியாற்றி, இறைத் தொழிற்பாடுகளில் பொறுப்புக்கூறலை வலுப்படுத்தி வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துகின்றது.

### இலங்கையில் தற்போதைய நாணய-இறைக் கொள்கை ஒருங்கிணைப்பு

அண்மைக்கால சட்டவாக்கத் திருத்தங்களின் கீழ் இறை மற்றும் நாணயக் கொள்கைக் கட்டமைப்புக்களை தெளிவாக வேறாக்கியதன் மூலம் இறை, நாணய மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டுக் கொள்கைகளை ஒருங்கிணைப்பதற்கான சபையினைத் தாபிப்பதன் மூலம் நாணய-இறைக் கொள்கை ஒருங்கிணைப்பை நிறுவனமயப்படுத்துவதற்கு விசேட ஏற்பாடுகளை மத்திய வங்கிச் சட்டம் ஏற்படுத்தியுள்ளது. நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அத்துடன் மத்திய வங்கி என்பவற்றுக்கிடையில் பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள், தோற்றப்பாடு மற்றும் இடர்நேர்வு என்பன மீதான தகவல்களைப் பகிர்தல் மற்றும் கலந்துரையாடல் என்பவற்றுக்கான முறைசார்ந்த தளமாக ஒருங்கிணைப்புச் சபை பணியாற்றுகின்றது. மத்திய வங்கி ஆளுநரையும் திறைசேரிக்கான செயலாளரையும் உறுப்பினர்களாகக் கொண்ட ஒருங்கிணைப்புச் சபை இறை அதிகாரி மற்றும் மத்திய வங்கி ஆகிய இரண்டையும் சேர்ந்த மூத்த அலுவலர்களை ஒன்றுசேர்க்கின்றது. காலாண்டு ரீதியாக கூட்டப்பட்டு தொடர்புடைய நாணய மற்றும் இறை தகவல்களின் பரிமாற்றத்தை வசதிப்படுத்தி இதனூடாக மிகவும் தகவலறிந்த அத்துடன் ஒத்திசைவான கொள்கைத் தீர்மானத்தை மேற்கொள்வதற்கு இச்சபை ஆதரவளிக்கின்றது. அண்மையில், ஒருங்கிணைப்புச் சபைக் கூட்டங்களுக்கிசைவாக ஒருங்கிணைப்புச்

1 Sargent, T. J., & Wallace, N. (1981). Some unpleasant monetarist arithmetic. In Monetarism in the United Kingdom (pp. 15-41). London: Palgrave Macmillan UK.

3

3

சபைக் கூட்டங்களின் நடவடிக்கை முறைகளை வசதிப்படுத்துவதற்கும் மத்திய வங்கிக்கும் நிதி அமைச்சுக்குமிடையில் பகுப்பாய்வு ரீதியான ஈடுபாட்டையும் தொழிற்பாட்டு ஒருங்கிணைப்பையும் மேலும் வலுப்படுத்துவதற்கும் நாணய மற்றும் இறை அதிகாரிகளின் தொடர்புடைய அலுவலர்கள் மத்தியில் தொழில்நுட்ப மட்டக் கூட்டங்களும் இடம்பெறுகின்றன.

ஒருங்கிணைப்புச் சபைக்கு மேலதிகமாக, நிதியியல் முறைமை மேற்பார்வைக் குழுவினூடாக நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பாதுகாப்பதற்கு செயல்திறன்மிக்க முகவராண்மைகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பையும் மத்திய வங்கிச் சட்டம் ஏற்பாடுசெய்கின்றது. இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரினால் தலைமை வகிக்கப்படும் நிதியியல் முறைமை மேற்பார்வைக் குழுவில் மத்திய வங்கியின் மூத்த அலுவலர்கள், திறைசேரிக்கான செயலாளரினால் பெயர்குறிக்கப்பட்ட திறைசேரிக்கான துணைச் செயலாளர் ஒருவர் மற்றும் ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்கள் என்பன இடம்பெறுகின்றன. நிறுவனங்களுக்கிடையிலான இந்த உள்ளமைப்பு தகவல்களின் உரியகாலப் பரிமாற்றம், தகவலறிந்த கொள்கைக் கலந்துரையாடல் மற்றும் பேரண்டமுன்மதியுடைய கட்டமைப்பினுள் ஒட்டுமொத்த முறைமையினையும் பாதிக்கக்கூடிய இடர்நேர்வுகள் பற்றிய ஒருங்கிணைக்கப்பட்ட மதிப்பீடுகள் என்பவற்றை வசதிப்படுத்தி, இதனூடாக ஒட்டுமொத்த நிதியியல் முறைமை உறுதிப்பாட்டையும் வலுப்படுத்துவதற்கு ஒத்திசைவான மற்றும் நன்கு அணிசேர்ந்த கொள்கை பதிலிறுப்புகளுக்கு ஆதரவளிக்கின்றது. இதற்கு மேலதிகமாக, மத்திய வங்கிக்கும் நிதி அமைச்சுக்குமிடையில் கொள்கை ஒருங்கிணைப்பினை வலுப்படுத்தி, நெருக்கடி தயார்நிலையை மேம்படுத்துவதற்கும் அத்துடன் நிதியியல் துறை மீதான அண்மைய பொருளாதார நெருக்கடியின் கசிவுத்தாக்கங்களைக் குறைப்பதற்கும் 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் நிதியியல் துறை நெருக்கடி முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டது. தோற்றம்பெறுகின்ற இடர்நேர்வுகளுக்குத் தீர்வுகாண்பதில் தொடர்புடைய அதிகாரிகள் மத்தியில் செயல்திறன்மிக்க ஒருங்கிணைப்பினை குழு இயலச்செய்துள்ளது.

அதேவேளை, பொது கடன் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ் பொதுப்படுகடன் ஒருங்கிணைப்புக் குழு தாபிக்கப்பட்டுள்ளது. திறைசேரிக்கான துணைச் செயலாளரின் தலைமையில் மத்திய வங்கியிடமிருந்து நியமிக்கப்பட்ட இரு பிரதிநிதிகள் உள்ளடங்கலாக ஒன்பது உறுப்பினர்களை பொதுப் படுகடன் ஒருங்கிணைப்புக் குழு உள்ளடக்குகின்றது. பொதுப்படுகடன் முகாமைத்துவ உபாயம் ஒட்டுமொத்த பேரண்டப்பொருளாதார கொள்கைகளுடன் அணிசேர்ந்திருப்பதை உறுதிசெய்தல், கடன்பெறுதல் திட்டங்களை மதிப்பிடுதல் மற்றும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சந்தைகளிலுள்ள நிலைமைகளைக் கணிப்பிடுதல் ஆகிய பணிகள் பொதுப்படுகடன் ஒருங்கிணைப்புக் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. மத்திய வங்கியின் பொதுப்படுகடன் ஒருங்கிணைப்புக் குழு மீதான பிரதிநிதித்துவதும் அரசாங்கப் படுகடன் முகாமைத்துவத் தீர்மானங்கள் மீது மத்திய வங்கி நேரடியாகச் செல்வாக்குச் செலுத்துவதற்கு இடமளிக்காது பொதுப் படுகடன் முகாமைத்துவத்திற்கு ஆதரவளிப்பதில் நாணய மற்றும் இறை அதிகாரிகளுக்கிடையில் முன்னெடுக்கப்படும் ஒருங்கிணைப்பை வசதிப்படுத்துகின்றது.

செயல்திறன்மிக்க நாணய மற்றும் இறைக் கொள்கை ஒருங்கிணைப்பானது மத்திய வங்கியின் ஆளுநருக்கும் திறைசேரிக்கான செயலாளருக்குமிடையில் பேரண்டப்பொருளாதார முக்கியத்துவத்தைக் கொண்ட கருமங்களில் நெருக்கமான மற்றும் தொடர்ச்சியான ஈடுபாட்டினால் மேலும் மீள்வலிமைப்படுத்தப்படுகின்றது. முக்கிய பொருளாதாரக் கொள்கை விடயங்கள் பற்றித் தீர்மானம் மேற்கொள்வதில் ஒத்திசைவையும் இணக்கப்பாட்டையும் உறுதிசெய்வதற்கு இரு நிறுவனங்களும் கிரமமான தொடர்பூட்டல் மற்றும் ஒருங்கிணைப்பினை பேணுகின்றன. இதற்கு மேலதிகமாக, ஒருங்கிணைப்பை வேண்டுகின்ற கருமங்கள் மீது மத்திய வங்கி ஏனைய நிரல் அமைச்சுக்களுடனும் அரசாங்கத் துறை நிறுவனங்களுடனும் ஆக்கபூர்வமாக ஈடுபட்டு பொருளாதாரக் கொள்கைக்கான முழுமையான அணுகுமுறையினைப் பிரதிபலிக்கின்றது. முக்கியமாக, ஐக்கிய அமெரிக்க தீர்வைக் கொள்கை மாற்றங்கள், டித்வா புயலினால் தோற்றுவிக்கப்பட்ட கடுமையான காலநிலை தொடர்புபட்ட இடையூறுகள் மற்றும் மத்திய கிழக்கில் படிப்படியாக அதிகரிக்கின்ற புவிசார் அரசியல் பதற்றங்கள் போன்ற தீவிரமடைந்த உள்நாட்டு மற்றும் உலகளாவிய நிச்சயமின்மைகளைக் கொண்ட காலப்பகுதியில் அரசாங்கத்திற்கும் மத்திய வங்கிக்குமிடையில் நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட கொள்கை ஈடுபாடு இடர்நேர்வுகளை மதிப்பிட்டு, உரியகாலக் கொள்கை பதிலிறுப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கு துணையளித்து, இதன்மூலம் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினைப் பாதுகாத்து பொருளாதார ரீதியான தாக்குப்பிடிக்கும் தன்மைக்கு ஆதரவளிக்கின்றது.

மேலும், மத்திய வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழ், பணவீக்க இலக்கானது அதிகாரிகளுக்கிடையிலான உயர்மட்ட ஒருங்கிணைப்புடன் கூடிய முழுமையான கணிப்பீடொன்றின் பின்னர் அரசாங்கம் மற்றும் மத்திய வங்கி மூலம் இணைந்து தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2022 பொருளாதார நெருக்கடியிலிருந்து இலங்கையின் எதிர்பார்க்கப்பட்டதையும் விட முன்கூட்டிய மீட்சி

பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டை மீளமைப்பதில் நாணய மற்றும் இறைக் கொள்கைகளுக்கிடையிலான செயல்திறன்மிக்க ஒருங்கிணைப்பின் இன்றியமையாத முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட ஒழுக்கமிக்க இறை வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தல், முன்மதிமிக்க நாணயக் கொள்கை அதேபோன்று கட்டமைப்புசார்ந்த மறுசீரமைப்புக்கள் என்பன பணவீக்கத்தை நிலைப்படுத்தச்செய்ததுடன், அரசாங்க நிதியிடல்களை வலுப்படுத்தி பொருளாதார நடவடிக்கைகளை படிப்படியாக மீட்டெடுப்பதற்கு நாட்டை இயலச்செய்தன. கடுமையான பொருளாதார இடரைக்கொண்ட காலப்பகுதியில் பயணிப்பதிலும் பொருளாதார உறுதிப்பாட்டை நோக்கிய பாதையில் பொருளாதாரத்தை மீண்டும் இடம்பெறச்செய்வதிலும் இவ்வொருங்கிணைக்கப்பட்ட கொள்கை அணுகுமுறை இன்றியமையாத வகிபாகமொன்றை ஆற்றியுள்ளது.

### முடிவுரை

2022இல் சமூகப் பொருளாதார நெருக்கடியின் பாதிப்பின் பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட அண்மைய சட்டவாக்க மறுசீரமைப்புக்கள், மேம்பட்ட பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை மூலம் துணையளிக்கப்பட்டு மிகத் தெளிவான வரையறுத்தலை நிறுவி, நாணய மற்றும் இறைக் கொள்கைக் கட்டமைப்புக்களை வலுப்படுத்தியுள்ளன. அத்துடன், நாணய-இறைக் கொள்கை ஒருங்கிணைப்பிற்கான ஆற்றல்வாய்ந்த பொறிமுறைகளை இம்மறுசீரமைப்புக்கள் பேணிக்காத்து பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டிற்கும் நிலைபெறத்தக்க அபிவிருத்தி வளர்ச்சிக்கும் ஆதரவளிக்கும். முன்நோக்கி நோக்குகையில், நாணய மற்றும் இறை அதிகார சபைகளுக்கிடையிலான தொடர்ச்சியான மற்றும் ஆக்கபூர்வமான ஒருங்கிணைப்பு நாட்டின் மேம்பட்ட பொருளாதாரப் பெறுபேறுகளை அடைவதில் அத்தியாவசியமானதாக விளங்கும்.

3

காலாண்டு முதன்மைப் பணவீக்கமானது தொடர்ச்சியாக இலக்கிற்கு கீழே காணப்பட்டமையினால், முறையே, 2024 திசெம்பரிலும், 2025 மாச்சிலும், யூனிலும், ஓகத்திலும் மற்றும் திசெம்பரிலும் இதையொத்த ஐந்து அறிக்கைகள் நிதியமைச்சரினூடாக பாராளுமன்றத்திற்கு சமா்ப்பிக்கப்பட்ட அதேவேளை, 2026 மாச்சில் ஆறாவது அறிக்கையும் நிதியமைச்சருக்கு சமா்ப்பிக்கப்பட்டது. பொதுமக்கள் இவ்வறிக்கைகளை மத்திய வங்கியின் உத்தியோகப்பூர்வ இணையதளத்தில் அணுகிப் பெற்றுக்கொள்ளலாம்.[1] மேலும், நாணயக் கொள்கையின் நடைமுறைப்படுத்தல் அத்துடன் அதன் குறிக்கோள்களின் அடைவு என்பவற்றுடன் பணவீக்கத்தின் அசைவுகள், பணவீக்கத்தின் மூலங்கள், பணவீக்கத்திற்கான நடுத்தரகால எறிவுகள் மற்றும் அத்தகைய எறிவுகளுக்கான முக்கிய இடர்நேர்வுகள் என்பவற்றை விளக்குகின்ற ஆண்டிற்கு இருமுறை வெளியிடப்படும் நாணயக் கொள்கை அறிக்கையினை ஒவ்வொரு ஆண்டும் பெப்புருவரி மற்றும் ஓகத்தில் மத்திய வங்கி வெளியிடுகின்றது. பரந்தளவிலான நாணயக் கொள்கை தொடர்பூட்டல் கட்டமைப்பின் ஒரு பகுதியாக, மத்திய வங்கியானது, 2025இல் ஆண்டிற்கு இருமுறை வெளியிடப்படும் சந்தைத் தொழிற்பாட்டு அறிக்கையை தொடர்ச்சியாக வெளியிட்டதுடன், இது திறந்தச் சந்தை தொழிற்பாடுகள், திரவத்தன்மை முகாமைத்துவம், குறுங்கால வட்டி வீத அபிவிருத்திகள் மற்றும் நியதி ஒதுக்குத் தேவைப்பாடு உள்ளடங்கலாக நாணயக் கொள்கை தொழிற்பாடுகள் குறித்த விரிவான தகவல்களை வழங்குகின்றது. மேலும், மத்திய வங்கியின்தொழிற்பாடுகள் பற்றி கலந்தாலோசிப்பதற்கு ஆளுநர், ஆளும் மற்றும் நாணயக் கொள்கைச் சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் துணை ஆளுநர்கள் பாராளுமன்றத்தினால் அல்லது அதன் குழுக்களால் அழைக்கப்படுதல் வேண்டும். இது தொடர்பில், மத்திய வங்கியின் சபை உறுப்பினர்களும் மூத்த முகாமைத்துவமும், அத்தகைய குழுக்களின் கோரிக்கையின் பேரில் பாராளுமன்றக் குழுக்களில் மத்திய வங்கி அலுவலர்கள் சமூகமளிப்பதற்கு மேலதிகமாக, 2025 சனவரியிலும், யூனிலும், நவெம்பரிலும், 2026 பெப்புருவரி மற்றும் மாச்சிலும் பாராளுமன்றத்தை அத்துடன்/அல்லது அதன் குழுக்களை நாடியிருந்தனர். மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ் ஒருங்கிணைப்புச் சபையினைத் தாபித்ததன் மூலம் அரசிறை, நாணய மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டுக் கொள்கைகள் என்பவற்றிற்கிடையிலான மேம்பட்ட ஒருங்கிணைப்பு வசதிப்படுத்தப்பட்டு, பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள், தோற்றப்பாடு, இடர்நேர்வுகள் மற்றும் மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சு ஈடுபடுகின்ற கருமங்கள் என்பவை பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கு காலாண்டு ரீதியாகக் ஒன்றுக்கூடுகின்றன. ஒருங்கிணைப்புச் சபைக் கூட்டங்களுடன் இசைந்து செல்லும் வகையில், அக்கூட்டங்களின் நடவடிக்கை முறைகளை வசதிப்படுத்துவதற்காக அரசிறை மற்றும் நாணய அதிகாரங்களின் தொடர்புடைய அதிகாரிகளுக்கிடையில் தொழில்நுட்ப மட்டக் கூட்டங்களும் நடாத்தப்படுகின்றன. இத்தகைய ஈடுபாடுகள் மத்திய வங்கியின்

1 நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட பணவீக்க இலக்கிலிருந்து முதன்மைப் பணவீக்கம் விலகியமை மீதான அறிக்கைகள் https://www.cbsl.gov.lk/en/monetary-policy/monetary-policy-communication/accountability-to-parliament என்ற இணைப்பில் கிடைக்கப்பெறுகின்றன.

கொள்கைகள், தொழிற்பாடுகள் மற்றும் பொறுப்பாணை என்பவற்றின் மீதான ஒட்டுமொத்த ஆர்வலரின் புரிந்துணர்வை அதிகரிக்க உதவிய அதேவேளை பல்வேறு ஆர்வலரிடமிருந்து கருத்துக்களையும் கண்ணோட்டங்களையும் பெறுவதற்கும், அதன் மூலம் கொள்கை உருவாக்கத்தையும் பொறுப்புக்கூறலையும் வலுப்படுத்துவதற்கும் மத்திய வங்கிக்கு ஒரு தளமாக இது அமைகிறது.

## 3.2 நாணயக் கொள்கை நிலைப்பாடும் வழிமுறைகளும்

3

**தாழ்ந்தளவிலான பணவீக்க சூழல் மற்றும் நன்கு நிலைநிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைக்கு மத்தியில் இலங்கை மத்திய வங்கியானது, 2023இன் நடுப்பகுதியில் தொடங்கிய ஓர் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டினை 2025 முழுவதும் பேணியது.** 2024 நவெம்பரின் கொள்கை வீதக் குறைப்பிலிருந்து நடைமுறையிலிருந்த கொள்கை இடைநிறுத்தத்தை இலங்கை மத்திய வங்கி 2025இன் ஆரம்பக் காலப்பகுதியிலும் பேணியது. இது தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டுடன் இசைந்து செல்லும் வகையில் சந்தை வட்டி வீதங்கள் படிப்படியாக கீழ்நோக்கி சீராக்கமடைய அனுமதித்த அதேவேளை, உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகள் வலுவடைந்ததுடன் தனியார் துறைக்கான கொடுகடனும் தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்தது. தாழ்ந்தளவிலான வட்டி வீத சூழல் மற்றும் நீடிக்கப்பட்ட நாணயத் தளர்வுக் காலப்பகுதி இருந்த போதிலும், தாழ்ந்தளவிலான வலு விலைகளின் தாக்கத்தினை பகுதியளவில் பிரதிபலித்து, பணவீக்கமானது அதன் இலக்கிற்கு கீழே காணப்பட்டது. இதன் விளைவாக, முன்னர் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க பணவீக்கமானது மேலும் படிப்படியாக இயல்புநிலைக்கு திரும்புமென எதிர்பார்க்கப்பட்டது. இதன் பின்னணியில் மற்றும் இலங்கைக்கு தாக்கம் செலுத்தக்கூடிய உயர்வடைந்த உலகளாவிய நிச்சயமற்றத்தன்மைகளுக்கு மத்தியில், மத்திய வங்கியானது ஆண்டுக்காலப்பகுதியில் மேற்கொண்ட ஒரே கொள்கை வீதச் சீராக்கமாக, 2025 மேயில் கொள்கை வீதத்தை மேலுமொரு 25 அடிப்படைப் புள்ளிகளினால் குறைத்தது. இக்குறைப்பினால் ஆதரவளிக்கப்பட்டு, 2025இல் ஒட்டுமொத்த சந்தை வட்டி வீதக் கட்டமைப்பானது கீழ்நோக்கிச் சீராக்கப்பட்டது. இருப்பினும், ஆண்டின் பிற்பகுதியில் குறுங்கால வட்டி வீதங்களில் தற்காலிகமான அதிகரிப்பொன்று காணப்பட்டது. தொடர்ச்சியான பதினொரு மாத பணச்சுருக்கத்தின் பின்னர், பணவீக்கமானது 2025 ஓகத்தில் நேர்கணிய புலத்திற்கு திரும்பலடைந்தது மற்றும் தனியார் துறைக்கான கொடுகடன் வலுவாக தொடர்ந்து விரிவடைந்தது என்பவற்றை கருத்திற்கொண்டு, மத்திய வங்கியானது ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியிலும், 2026இன் முற்பகுதியிலும் கொள்கை வீதத்தை மாற்றமின்றிப் பேணியது. இதற்கமைய, தற்போதைய நாணயக் கொள்கைத் தளர்வுச் சுழற்சியின் போது, கொள்கை வீதத்தின் ஒட்டுமொத்த குறைப்பானது, 2026 மாச்சளவில் ஏறத்தாழ 800 அடிப்படைப் புள்ளிகளாகவிருந்தன.

**உள்நாட்டுப் பணச் சந்தையில் மேம்பட்ட திரவத்தன்மை நிலைமைகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் மத்தியில், மத்திய வங்கியானது திறந்த சந்தை நடவடிக்கைகளினூடாக திரவத்தன்மை உட்செலுத்துகைகளை 2025இன் முற்பகுதியில் படிப்படியாகக் குறைத்து இடைநிறுத்தியது.** நிலவும் மிகையான திரவத்தன்மையுடன், மத்திய வங்கியானது திரவத்தன்மை நிலைமைகளையும் ஓரிரவு வட்டி வீத அசைவுகளையும் நெருக்கமாகக் கண்காணித்தது. 2025இன் முதலரையாண்டு காலப்பகுதியில், உள்நாட்டுப் பணச் சந்தையில் மிகையான திரவத்தன்மையைப் பிரதிபலித்து, குறிப்பாக வெளிநாட்டு மற்றும் அரச வங்கிகளால் மேற்கொள்ளப்பட்ட துணைநில் வைப்பு வசதியிலுள்ள இருப்புகள் ஒப்பீட்டளவில் உயர்வடைந்து காணப்பட்டன. மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகளினால் ஆதரவளிக்கப்பட்டு உள்நாட்டுப் பணச் சந்தையில் திரவத்தன்மை தொடர்ச்சியாக அதிகரித்ததால், 2026இன் முற்பகுதியில் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது ஓரிரவு கொள்கை வீதத்தினை நோக்கி படிப்படியாக ஒருங்கிணைந்தது. திரவத்தன்மை மிகை மேலும் அதிகரித்தமையினால், 2026 பெப்புருவரி நடுப்பகுதியிலிருந்து ஓரிரவு மற்றும் குறுகியகால அடிப்படையிலான மீள்கொள்வனவு ஏலங்களை மத்திய வங்கி ஆரம்பித்தது.

**2025 முழுவதும், நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புடன் இசைந்து செல்லும் வகையில், மத்திய வங்கி நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீத முறையினை தொடர்ச்சியாகப் பேணியது.** நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீதமானது தன்னியக்க நிலைப்படுத்தியொன்றாக செயற்பட்டு, வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு

சிறப்புக் குறிப்பு 05

## இலங்கையின் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் விலை கண்டறிதல் பொறிமுறையை வலுப்படுத்துதல்

### அறிமுகம்

திறந்த பொருளாதாரங்களின் முக்கிய பேரண்டப்பொருளாதார மாறிலியொன்றாக விளங்கும் செலாவணி வீதமானது வர்த்தகப் போட்டித்தன்மை, உள்நாட்டு விலை உறுதிப்பாடு மற்றும் பொருளாதாரங்களின் ஒட்டுமொத்த பேரண்டப் பொருளாதார செயலாற்றுகை என்பவற்றில் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தினை ஏற்படுத்துவதன் மூலமாக வர்த்தகப் பாய்ச்சல்கள், மூலதன அசைவுகள் மற்றும் நாணயக் கொள்கையின் ஊடுகடத்தல் என்பவற்றை வடிவமைக்கின்றது. இறக்குமதிகள், மற்றும் ஏற்றுமதிகள், சுற்றுலாத்துறை, தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் நிதியியல் பாய்ச்சல்கள் என்பவற்றிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் மீது அதிகளவில் தங்கியிருக்கும் இலங்கை போன்ற சிறிய திறந்த பொருளாதாரங்களில் செலாவணி வீத அசைவுகள் குறிப்பிடத்தக்க கவனத்தை ஈர்க்கின்றன.

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டம் இயற்றப்பட்டதைத் தொடர்ந்து, நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பொன்றின் கீழ் நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீத அமைப்பொன்றினை நிறுவியதனூடாக இலங்கையின் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையானது கட்டமைப்புசார் நிலைமாற்றத்திற்குட்பட்டு, செலாவணி வீத நிர்ணயத்தின் அடிப்படையாக சந்தை அடிப்படையிலான விலை கண்டறிதலை முறைமையாக்கியது.

இக்கட்டுரையானது, இலங்கையின் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் விலை கண்டறிதல் செயன்முறை, அதன் முக்கியத்துவம், சந்தைப் பங்கேற்பாளர்களின் வகிபாகம், மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட அண்மைய முன்னெடுப்புக்கள் மற்றும் எதிர்கால முன்னோக்கிய பார்வை தொடர்பில் ஆராய்கின்றது.

### வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் விலை கண்டறிதல்

விலை கண்டறிதல் என்பது வழங்கல், கேள்வி, இடர்நேர்வு எண்ணப்பாங்குகள், தகவல்களின் கிடைப்பனவு மற்றும் நிலவும் பொருளாதார நிலைமைகள் என்பவற்றினை பிரதிபலித்து, உண்மையான கொடுக்கல்வாங்கல்களின் அடிப்படையில் சந்தை விலைகளை நிர்ணயிக்கும் செயன்முறையொன்றாகும். (ரோசன்பெர்க் மற்றும் டூரவ்ப், 2009).

வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையானது, பொருளாதார நிலைமைகளையும் சந்தை எண்ணப்பாங்குகளையும் பிரதிபலித்து, நாணயங்களுக்கான வழங்கலினதும் கேள்வியினதும் தொடர்பினூடாக செலாவணி வீதங்களை நிர்ணயிப்பதால் விலை கண்டறிதலில் முக்கிய பங்காற்றுகின்றது. பொருளாதார தரவுகள், கொள்கை அறிவிப்புகள் மற்றும் புவிசார் அரசியல் அபிவிருத்திகள் என்பவற்றின் மாற்றங்களுக்கு இசைவாக செலாவணி வீதங்கள் துரிதமாக சீராக்கம் செய்யப்படுவதுடன், வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையானது புதிய தகவல்களுக்கு உயர்ந்தளவு உணர்திறனுடன் காணப்படுகின்றது.

வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் விலை கண்டறிதலானது, மத்திய வங்கிகள், வர்த்தக வங்கிகள், நிறுவன முதலீட்டாளர்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சில்லறை வர்த்தகர்கள் போன்ற தனிப்பட்ட இலக்குகள் மற்றும் இடர்நேர்வு விருப்பங்களைக் கொண்ட பரந்தளவிலான பங்கேற்பாளர்களின் பங்குபற்றுதலுடன் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. பேரண்டப்பொருளாதார போக்குகள், மூலதனப் பாய்ச்சல்கள் மற்றும் எதிர்பார்க்கைகள் என்பவற்றினால் வடிவமைக்கப்படும் அவர்களது கூட்டு வர்த்தகமானது அதேநேர செலாவணி வீதங்களை நிர்ணயித்து, செலாவணிச் சந்தையை விலை உருவாக்கத்திற்காக அதிக செயற்றிறன்மிக்கதாகவும் தகவல்வளம்மிக்கதாகவும் உருவாக்குகின்றது. (பன்னாட்டு தீர்ப்பனவுகளுக்கான வங்கி, 2023).

### விலை கண்டறிதலின் முக்கியத்துவமும் பொருளாதார நன்மைகளும்

வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் செயற்றிறன்மிக்க விலை கண்டறிதலினூடாக செலாவணி வீதமானது பொருளாதாரமொன்றின் போட்டித்தன்மையின் அதேநேர சமிக்ஞையொன்றாக தொழிற்படுகின்றது. சந்தையால் தீர்மானிக்கப்படும் விலை கண்டறிதல் இல்லாவிடில், பொருளாதார சமிக்ஞைகள் திரிபடைந்து உண்மையான மதிப்பை பிரதிபலிக்காத வர்த்தகத்தினையும் செயற்றிறனற்ற முதலீட்டு தீர்மானங்களையும் உருவாக்கி, இறுதியாக வளங்களின் தவறான ஒதுக்கீடு, மெதுவான வளர்ச்சி, பலவீனமான நாணயக் கொள்கை ஊடுகடத்தல் மற்றும் வெளிவாரி அதிர்வுகளுக்கான அதீத பாதிப்பிற்குள்ளாகும்தன்மை போன்றவற்றிற்கு வழிவகுக்கின்றது.

செயற்றிறன்மிக்க விலை கண்டறிதலானது உண்மையான வழங்கல் மற்றும் கேள்வி நிலைமைகளை செலாவணி வீதம் பிரதிபலிப்பதை உறுதி செய்து, வர்த்தக ரீதியான போட்டித்தன்மை, முதலீட்டு தீர்மானங்கள் மற்றும் வியாபாரத் திட்டமிடல் என்பவற்றிற்கு ஆதரவளித்து, அதன் மூலம் உற்பத்தித்திறனையும் பொருளாதார வளர்ச்சியையும் ஊக்குவிக்கின்றது. மேலும், நாணயத்தின்

3

பெறுமதியானது வெளிப்படைத்தன்மைமிக்கதெனவும் சந்தையினால் நிர்ணயிக்கப்படுகின்றதெனவும் முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கையளிப்பதன் மூலம் வெளிநாட்டு நேரடி முதலீடுகளுக்கும் சொத்துப்பட்டியல் பாய்ச்சல்களுக்கும் இது ஆதரவளிக்கின்றது.

மேலும், விலை கண்டறிதலானது செலாவணி வீதத்தினை வட்டி வீதத் தீர்மானங்களுடன் இசைந்து நகர்வதற்கு அனுமதிப்பதன் மூலம் நாணயக் கொள்கை ஊடுகடத்தல் பொறிமுறையை வலுப்படுத்துகின்றது. பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பொன்றின் கீழ், சந்தையால் தீர்மானிக்கப்படும் செலாவணி வீதமொன்றானது அதிர்வினை ஈர்ப்பதாக செயற்பட்டு, வட்டி வீதக் கொள்கையை நிறைவளித்து, அடிப்படை பொருளாதார அம்சங்களை பிரதிபலிப்பதன் மூலம் நாணயக் கொள்கையை ஊடுகடத்துகின்றது. மேலும், வெளிப்படையான விலை கண்டறிதலானது ஊக அடிப்படையிலான திரிபடைதல்கள் மற்றும் சமாந்தர சந்தைச் செலாவணி வீதங்கள் போன்றவற்றை குறைக்கின்றது. இறுதியாக, பெறுமதி சந்தைகளின் அபிவிருத்திக்கான சூழலை உருவாக்குவதன் மூலம் நிதியியல் ஆழமடைதலுக்கு பங்களித்து செலாவணி வீத இடர்நேர்வுகளுக்கு எதிராக வியாபாரங்களை பாதுகாக்க அனுமதிக்கின்றது.

உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைவதற்காக நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீத முறைமையின் அறிமுகத்தினையும் நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடலின் செயற்றிறன்மிக்க நடைமுறைப்படுத்தலையும் தொடர்ந்து, வலுவான விலை கண்டறிதலானது இலங்கைக்கு அதிகளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியுள்ளது. வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதன் மூலமும் எதிர்பார்க்கைகளை நிலைநிறுத்துவதன் மூலமும் இது பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டிற்கு பங்களிப்பதுடன் நீண்டகால பொருளாதார தாக்குப்பிடிக்குந்தன்மையை வலுப்படுத்துகின்றது.

செயற்றிறன்மிக்க விலை கண்டறிதலானது இலங்கையின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் மீட்சிக்கும் உறுதிப்பாட்டிற்கும் முக்கிய உந்துசக்தியொன்றாக இருந்துவந்துள்ளது. சந்தை அடிப்படையிலான விலையிடலில் ஏற்பட்ட மேம்பாடானது 2022இல் மிகவும் தாழ்ந்த மட்டத்திலிருந்த மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை சந்தை திரிபடைவுகளை உருவாக்காமல் 2025இன் இறுதிக்குள் வலுவான நிலைக்கு மீள்கட்டியெழுப்புவதற்கு இலங்கை மத்திய வங்கியை இயலுமைப்படுத்தியது. இது, குறிப்பாக 2025இல் வெளிநாட்டுச் செலாவணி பொருந்தச்செய்தல் தளத்தின் அறிமுகத்தினைத் தொடர்ந்து போட்டித்தன்மைவாய்ந்த விலையிடல், திரவத்தன்மை மற்றும் சந்தை ஆழம் என்பவற்றின் மேம்படுத்தல் மூலமான வங்கிகளுக்கிடையிலான அதிகரித்த சந்தை நடவடிக்கைகளால் மேலும் வலுப்படுத்தப்பட்டது. 2023 மற்றும் 2024 காலப்பகுதியில் இலங்கை ரூபாய் குறிப்பிடத்தக்களவில் உயர்வடைந்த அதேவேளை, சமாந்தர சந்தை மிகையை நீக்கி, அனைத்து வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களுக்குமான நம்பகமான அடித்தள அளவுகோலாக வெளிப்படையானதும், ஒருங்கிணைந்ததுமான செலாவணி வீதத்தின் வகிபாகம் மீளவலுப்படுத்தப்பட்டது.

### விலை கண்டறிதலில் சந்தைப் பங்கேற்பாளர்களின் வகிபாகம்

விலை கண்டறிதலின் செயற்றிறன்மிக்கத்தன்மையானது சந்தைப் பங்கேற்பாளர்களின் பல்லினத்தன்மை மற்றும் நடத்தை, அதனுடன் இணைந்து ஒழுங்கான சந்தை நிலைமைகள் மற்றும் நிலைத்து நிற்கும் நம்பிக்கை என்பவற்றை உறுதிசெய்வதில் மத்திய வங்கிகளின் வகிபாகம் என்பவற்றின் மூலம் வடிவமைக்கப்படும் அதேவேளை, செலாவணி வீதங்கள் சந்தை விசைகளினால் வழிநடத்தப்படவும் அனுமதிக்கின்றது. (ஒஸ்லர், மென்டே மற்றும் மென்க்ஹொப், 2011). இலங்கையில் உரிமம்பெற்ற வங்கிகள் முதன்மை இடையேற்பாட்டாளர்களாகவும் சந்தை வகுப்பாளர்களாகவும் செயற்பட்டு, வங்கிகளுக்கிடையிலான மற்றும் வாடிக்கையாளர் கொடுக்கல்வாங்கல்களுக்கு ஆதரவளிக்கின்றன. மேலும், ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள், நிறுவன முதலீட்டாளர்கள், வெளிநாட்டு சொத்துப்பட்டியல் முதலீட்டாளர்கள் மற்றும் வெளிநாட்டில் தொழில்புரிபவர்கள் போன்றோர் வர்த்தகம் மற்றும் முதலீட்டால் உந்தப்படும் வெளிநாட்டுச் செலாவணி கேள்வி மற்றும் நிரம்பல் என்பவற்றினூடாக பங்களிக்கின்றனர். பரந்தளவிலான முகவர்களிடமிருந்தான முனைப்பான பங்கேற்பானது செலாவணி வீதப் பொருளாதார அடிப்படைகளை உள்ளடக்குவதை உறுதி செய்கின்றது.

இலங்கை மத்திய வங்கியானது முதன்மையாக ஒதுக்குகளை கட்டியெழுப்புவதற்கும் ஒழுங்கான சந்தை நிலைமைகளை உறுதிசெய்வதற்கும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் முனைப்புடன் தலையீடு செய்கின்ற அதேவேளை, செலாவணி வீதங்கள் சந்தை அடிப்படையிலான விலை கண்டறிதலினூடாக நிர்ணயிக்கப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியின் தற்போதுள்ள உட்கட்டமைப்பு முன்னெடுப்புக்கள் வெளிப்படைத்தன்மை, செயற்றிறன் மற்றும் சந்தை ஆழம் என்பவற்றை மேலும் மேம்படுத்துகின்றன.

### இலங்கையில் குறிப்புச் செலாவணி வீதத்தின் அறிமுகம்

இலங்கை மத்திய வங்கியானது திரவத்தன்மையை மேம்படுத்தவதற்கும் வெளிப்படைத்தன்மையை முன்னேற்றுவதற்குமான நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தி வருகின்றது. 2024இல் இலங்கை மத்திய வங்கியினாலும், அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளாலும், தேசிய சேமிப்பு வங்கியினாலும் வெளிநாட்டுச் செலாவணிக்கான உலகளாவிய குறிப்பெண்

பின்பற்றப்பட்டமையானது முக்கிய மைல்கல்லொன்றாக விளங்கி, உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையானது உலகளாவிய தரநியமங்களுடன் இசைந்து செல்வதை எடுத்துக்காட்டுகின்றது.

2026ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் கொள்கை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவாறு, வெளிப்படையான, சந்தையை பிரதிபலிக்கின்ற குறிப்புப் புள்ளியொன்றை வழங்குவதன் மூலம் விலை கண்டறிதலை மேம்படுத்துவதற்காக, “அடித்தள அளவுக்குறியீட்டு செலாவணி வீதமொன்று” (குறிப்புச் செலாவணி வீதம்) 2026இல் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் அறிமுகப்படுத்தப்படவிருக்கின்றது. அதன் வடிவமைப்பானது, குறிப்பாக, நிதியியல் அடித்தள அளவுக்குறியீடுகளுக்கான (2013) பிணையங்கள் ஆணைக்குழு கொள்கைகளுக்கான பன்னாட்டு அமைப்பின் பன்னாட்டு சிறந்த நடைமுறைகளை பின்பற்றி, நிதியியல் அடித்தள அளவுக்குறியீடுகளின் நேர்மை, ஆளுகை மற்றும் பொறுப்புக்கூறுந்தன்மையை உறுதி செய்வதற்கான அனைத்தையுமுள்ளடக்கிய கட்டமைப்பொன்றினை வழங்குகின்றது.

இந்த அடித்தள அளவுக்குறியீட்டின் வடிவமைப்பானது பரந்தளவிலான உண்மையான சந்தை நடவடிக்கைகளை உள்ளடக்குவதற்காக கொடுக்கல்வாங்கல் தளத்தை விரிவுபடுத்துவதை உள்ளடக்கி, அதன் மூலம் செலாவணி வீதமானது வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அடிப்படை இயக்கவாற்றல்களை பிரதிபலிப்பதை உறுதி செய்கின்றது. இது துல்லியத்தன்மையையும் நம்பகத்தன்மையையும் உறுதிசெய்யும் பொருட்டு ஒழுங்கீனங்களை வடிகட்டுதல் உள்ளடங்கலான வலுப்படுத்தப்பட்ட தரவு சரிபார்த்தல் செயன்முறைகளை உள்ளடக்கியுள்ளது. இவ்வறிமுகத்தினைத் தொடர்ந்து, 2025இன் முற்பகுதியில் உடன் ஐ.அ.டொலர்/ இலங்கை ரூபா கொடுக்கல்வாங்கல்களுக்கான மத்திய வரையறுப்பு கட்டளைப் பதிவேடொன்றினை உள்ளடக்கி, உள்நாட்டு வங்கிகளுக்கிடையிலான சந்தைக்கான வெளிநாட்டுச் செலாவணி பொருந்தச்செய்தல் தளமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது (இலங்கை மத்திய வங்கி, 2025 ப்ளும்பர்க், 2025).

இலங்கை வெளிநாட்டுச் செலாவணி அமைப்பு மற்றும் இலங்கை மத்திய வங்கி என்பவற்றிலிருந்தான பிரதிநிதிகளை உள்ளடக்கி ஏற்கனவே உருவாக்கப்பட்ட மேற்பார்வைக் குழுவுடன் இணைந்து சுயாதீன மேற்பார்வைக் கட்டமைப்பொன்றினை நிறுவுவதனூடாக குறிப்புச் செலாவணி வீதத்தின் ஆளுகை ஏற்பாடுகள் மீள்வலுப்படுத்தப்பட்டு வருகின்றன. இலங்கை மத்திய வங்கியானது நடைமுறை பொருத்தப்பாட்டினை உறுதி செய்வதற்காக பன்னாட்டு நாணய நிதியத்திலிருந்து தொழில்நுட்ப உதவியையும், இணையான நாடுகளின் அறிவினையும் அனுபவங்களையும், மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை ஆர்வலர்களுடனான ஆலோசனைகளையும் பெற்றுக்கொண்டதனூடாக இம்முன்னெடுப்பை மேலும் வலுப்படுத்தியது.

முன்மொழியப்பட்ட குறிப்புச் செலாவணி வீதமானது முன்னோக்கிய ஒப்பந்தங்கள், பரஸ்பர பரிமாற்றல்கள் மற்றும் தேர்வுகள் போன்ற பெறுதிச்சாதனங்களின் அபிவிருத்தியை வசதிப்படுத்தி பன்னாட்டு தரநியமங்களுடன் அணிசேர்வதனூடாக சந்தை நம்பிக்கையை வலுப்படுத்துமென எதிர்பார்க்கப்படும் அதேவேளை, சந்தை நிலைமைகளின் தெளிவான சமிக்ஞையொன்றினை வழங்குவதன் மூலம் நாணய மற்றும் செலாவணி வீதக் கொள்கைகளின் ஊடுகடத்தலையும் மேம்படுத்துகின்றது.

### முடிவுரை

செயற்றிறன்மிக்க விலை கண்டறிதலானது உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தையினதும் பரந்தளவிலான பேரண்டப்பொருளாதார கட்டமைப்பினதும் காத்திரமான தொழிற்பாட்டிற்கு அவசியமானதாகும். வெளிப்படையானதும் நல்லாளுகையானதுமான சந்தை செயன்முறையொன்றினூடாக அது நிர்ணயிக்கப்படுவதை உறுதி செய்தல் இன்றியமையாததாகும். இலங்கை மத்திய வங்கியின் தற்போதுள்ள சீர்த்திருத்த செயற்திட்டமானது விலை கண்டறிதலை வலுப்படுத்துவதற்கும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையை ஆழப்படுத்துவதற்கும் அனைத்தையுமுள்ளடக்கிய அணுகுமுறையொன்றினை பிரதிபலிப்பதோடு, இவ்வழிமுறைகள் இலங்கையின் நிலைபேறான உண்மைப் பொருளாதார செயலாற்றத்திற்கு ஆதரவளிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.


உசாத்துணைகள்

1. Bank for International Settlements (2023) The Foreign Exchange Market', BIS Working Papers, No. 1094.
2. Bloomberg (2025) 'Foreign Exchange Market in Sri Lanka Chooses Bloomberg FXGO's Electronic Matching System for the Interbank Foreign Exchange Market', Press Announcement, March 2025.
3. International Monetary Fund (2024) Sri Lanka: Staff Report for the Third Review Under the Extended Fund Facility. IMF Country Report No. 24/161.
4. International Organization of Securities Commissions (2013) Principles for Financial Benchmarks: Final Report, FR07/13. Madrid: IOSCO.
5. Osler, C.L., Mende, A. and Menkhoff, L. (2011) 'Price Discovery in Currency Markets', Journal of International Money and Finance, 30(8), pp. 1696–1718.
6. Rosenberg, J.V. and Traub, L.G. (2009) 'Price Discovery in the Foreign Currency Futures and Spot Market', Federal Reserve Bank of New York Staff Reports, No. 262.


அதிர்வுகளுக்கு ஏற்ப நாணயத்தை சீராக்கம் செய்வதற்கு அனுமதிக்கின்றது. அத்தகைய சீராக்கங்கள் சென்மதி நிலுவையின் சமநிலையற்ற தன்மைகளை திருத்துவதற்கு உதவுவதுடன், வெளிநாட்டு உறுதிப்பாட்டினை ஆதரவளிக்கின்றன. மேலும், செலாவணி வீத நெகிழ்ச்சித்தன்மையானது, முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட எந்தவொரு செலாவணி வீத மட்டத்தையும் பாதுகாப்பதற்கு வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளை பயன்படுத்துவதற்கான தேவையை குறைப்பதனால், மத்திய வங்கியின்

நாணயக் கொள்கை சுயாதீனத்தினை வலுப்படுத்துகின்றது. ஆண்டுக்காலப்பகுதியில், மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை தலையீடுகள், முதன்மையாக செலாவணி வீதத்தின் மிகையான தளம்பல்களைக் குறைப்பதை நோக்காகக் கொண்ட அதேவேளை, வெளிநாட்டுத் துறையின் தாங்கியிருப்புக்களை வலுப்படுத்துவதற்கு வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்குகளின் திரட்டலுக்கும் ஆதரவளித்தன.

3

**2025 முழுவதும், மத்திய வங்கியானது, பரந்தளவிலான ஆர்வலர்களின் எதிர்பார்க்கைகளை செயல்திறன்மிக்க வகையில் முகாமை செய்வதற்காக, அதன் நாணயக் கொள்கை தொடர்பூட்டலை தொடர்ச்சியாக வலுப்படுத்தியது.** மத்திய வங்கியானது, பாரம்பரிய தொடர்பூட்டல் கருவிகளின் பயன்பாட்டை பேணிய அதேவேளை, பொதுமக்களுக்கு சென்றடைதலையும் அணுகலையும் மேம்படுத்துவதற்காக நவீன மற்றும் டிஜிட்டல் ஊடக தளங்களினூடாக அதன் தொடர்பூட்டலை விரிவுபடுத்தியது. மத்திய வங்கியானது, அதன் நாணயக் கொள்கைத் தீர்மானங்களையும் கொள்கை நிலைப்பாட்டினையும் பரந்தளவிலான பொருளாதாரத்திற்கு எடுத்துரைப்பதற்காக, நாணயக் கொள்கை ஊடக வெளியீடுகள் மற்றும் ஆளுநர் தலைமையில் இடம்பெறும் ஊடக சந்திப்புகள் உள்ளடங்கலாக அதன் முக்கிய நாணயக் கொள்கை தொடர்பூட்டல் கருவிகளின் மீது தொடர்ந்தும் தங்கியிருந்தது. இவ் ஊடக வெளியீடுகளும் ஊடக சந்திப்புக்களும், நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் மற்றும் அவற்றிற்கு பக்கபலமாக அமைந்த நியாயங்கள் பற்றிய விளக்கங்களையும், குறிப்பாக பணவீக்க எறிவுகள் தொடர்பான பொருளாதார தோற்றப்பாட்டின் பரந்தளவிலான மதிப்பீட்டையும் வழங்கின. ஒவ்வொரு நாணயக் கொள்கை அறிக்கையும் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, மத்திய வங்கியானது, தகவலறிந்த உரையாடலை மேற்கொள்ளவும், குறிப்பாக பணவீக்கம் தொடர்பானவை, நாணயக் கொள்கை தீர்மானம் மேற்கொள்ளும் செயல்முறை மற்றும் பொருளாதார தோற்றப்பாடு பற்றிய புரிதலை மேம்படுத்துவதற்காகவும் ஊடகவியலாளர்கள், கல்வியலாளர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களுடன் தொழில்நுட்ப அமர்வுகளை நடாத்தியது. இம்முயற்சிகள், தகவலின் சீரற்றத்தன்மையை குறைப்பதற்கும், பணவீக்க எதிர்பார்க்கைகள் நிலைநிறுத்தப்படுவதை மேலும் வலுப்படுத்தவும் பங்களித்தன. ஆண்டுக்காலப்பகுதி முழுவதும், மத்திய வங்கியானது, நாணயக் கொள்கை அபிவிருத்திகள் பற்றிய நேர்காணல்கள் மற்றும் கலந்துரையாடல்கள் என்பவற்றினூடாக வெகுசன ஊடகங்களுடன் அதன் ஈடுபாட்டினை மேலும் வலுப்படுத்தி, நாணயக் கொள்கை மற்றும் பேரண்டப்பொருளாதார நிலைமைகள் மீதான தகவலறிந்த பொதுமக்கள் தொடர்பூட்டலை வசதிப்படுத்தியது. இதற்கு நிகராக, மத்திய வங்கியானது, பொதுமக்களுக்கு தகவல் சென்றடைதலை மேம்படுத்துவதற்காக டிஜிட்டல் மற்றும் சமூக ஊடக தளங்களின் பயன்பாட்டை விரிவுபடுத்தியதுடன், எளிமைப்படுத்தப்பட்ட தொடர்பூட்டல் வடிவங்களையும் தழுவி ஏற்றுக்கொண்டது. இம்முயற்சிகள், நாணயக் கொள்கை மற்றும் அபிவிருத்திகள் தொடர்பான பொதுமக்கள் புரிந்துணர்வினை மேம்படுத்துவதற்காக அனைத்து தேசிய மொழிகளிலும் வெளியிடப்பட்ட சமூக ஊடகப் பதிவுகள், ஒற்றை பக்கச் சுருக்கங்கள், குறுகிய காணொளி துணுக்குகள் மற்றும் பத்திரிகை கதைச்சித்திரங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. மக்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்காக நடாத்தப்படும் கல்விசார் அமர்வுகள் உள்ளடங்கலாக இலக்கிடப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பொதுமக்களைச் சென்றடையும் நடவடிக்கைகள் மூலமும் ஆர்வலர்களின் ஈடுபாடு மேலும் பலப்படுத்தப்பட்டு, இதன் மூலம் பரந்தளவிலான சமூகத்துடனான மத்திய வங்கியின் ஈடுபாடு வலுப்படுத்தப்பட்டது.

**மத்திய வங்கியானது, பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட மத்திய வங்கியுடன் தொடர்புடைய இலக்குகளை அடைவதற்கான அதன் முயற்சிகளைத் தொடர்ந்து மேற்கொண்டது.** அதன்படி, மத்திய வங்கியானது, அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனுடன் தொடர்புடைய விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழ் கணியம்சார் செயலாற்றப் பிரமாணத்தினை பூர்த்தி செய்தது. மேலும், சந்தையிலிருந்தான மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகள், நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான தேறிய பன்னாட்டு ஒதுக்குகளின் இலக்கினை அடைவதற்கு பங்களித்தன.

## 3.3 வெளிநாட்டுத் துறைக் கொள்கைகள்

### செலாவணிக் கட்டுப்பாடுகள் மற்றும் மூலதனப் பாய்ச்சல் முகாமைத்துவ வழிமுறைகள்

**2020இல் மூலதனப் பாய்ச்சல் முகாமைத்துவ வழிமுறைகளாக அறிமுகப்படுத்தப்பட்ட மூலதனக் கணக்கு கொடுக்கல்வாங்கல்கள் மீதான தற்காலிக இடைநீக்கங்கள் மற்றும் கட்டுப்பாடுகள் என்பவற்றின் தளர்த்தலானது, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் சாதகமான அபிவிருத்திகளையும் வலுப்படுத்தப்பட்ட வெளிநாட்டுத் துறை தாங்கியிருப்புக்களையும் கருத்திற் கொண்டு 2025 காலப்பகுதியிலும் தொடர்ந்தது.** இதன் விளைவாக, 2025இல் வெளிமுக முதலீட்டுக் கணக்குகளினூடாக மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு முதலீடுகள் மீதான வரையறைகள் அத்துடன் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளினூடாக மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுக்கான வெளிமுகப் பணவனுப்பல்கள் மீதான வரையறைகள் என்பன படிப்படியாக தளர்த்தப்பட்டு, உள்ளூர் தொழில்முயற்சிகள் தமது உலகளாவிய பங்களிப்பினை விரிவுப்படுத்த அனுமதித்தது. அதேவேளை, வதிவோரின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளினூடாக மேற்கொள்ளப்படும் முதலீட்டுக் கொடுக்கல்வாங்கல்கள் மீதான அனுமதிக்கப்பட்ட வரையறையும் அதிகரிக்கப்பட்டு, ஏற்கனவேயுள்ள ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் அறிக்கையிடல் தேவைப்பாடுகளுக்கு உட்பட்டு, சட்டரீதியான வெளிநாட்டு முதலீட்டு கொடுக்கல்வாங்கல்களுக்கான அதிக நெகிழ்வுத்தன்மையை தனிநபர்களுக்கு வழங்கியது. மத்திய வங்கியானது, 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள எஞ்சியிருக்கும் மூலதனப் பாய்ச்சல் முகாமைத்துவ வழிமுறைகளை, சென்மதி நிலுவை மற்றும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை நிலைமைகள் என்பவற்றில் ஏற்படும் அபிவிருத்திகளுடன் இசைந்து செல்லும் வகையில், படிப்படியாக மற்றும் தொடராக நீக்குவதற்கு தொடர்ந்தும் கடப்பாடு கொண்டுள்ளது.

**மத்திய வங்கியானது, 2025இல் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் வணிகர்களிடையேயான இணங்குவிப்பினை வலுப்படுத்துவதற்கு பல்வேறு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது.** 2025இல், மத்திய வங்கியானது, தொழிற்பாட்டு வெளிப்படைத்தன்மையையும் ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வையையும் மேம்படுத்தும் நோக்கில், அனைத்தையுமுள்ளடக்கிய வழிகாட்டலொன்றின் துணையுடன், அங்கீகரிக்கப்பட்ட நாணய மாற்றுநர்களுக்கு திருத்தப்பட்ட பணிப்புரைகளை வெளியிட்டது. இத்திருத்தங்கள், தொழிற்பாட்டு நியமங்கள், அறிக்கையிடல் தேவைப்பாடுகள் மற்றும் இணங்குவிப்பு கட்டமைப்புகள் என்பவற்றை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தி, இதன் மூலம் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் நேர்மைமிக்கத்தன்மைக்கும் செயல்திறன்மிக்கத்தன்மைக்கும் ஆதரவளித்தன. மேலும், மத்திய வங்கியானது, ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை காத்திரமான முறையில் செயல்படுத்துவதற்காக, அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களினாலும் அங்கீகரிக்கப்பட்ட நாணய மாற்றுநர்களினாலும் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டு நாணய வழங்கல்களை அதேநேர அடிப்படையில் பதிவு செய்து கண்காணிப்பதற்கான இணைய அடிப்படையிலான செயலியை உருவாக்கும் முயற்சியை முன்னெடுத்தது. இம்முன்னெடுப்பானது, 2026இல் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நாணய மாற்றுநர்களுக்கிடையில் முழுமையாக ஈடுப்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், ஏற்றுமதிப் பெறுகைகளின் கண்காணிப்பு முறைமையில் தொடர்ச்சியான மேம்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு, ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு மீளனுப்புவதுடன் ஏற்றுமதி பெறுமதிகளை ஒன்றிணைத்தலின் துல்லியத்தன்மை மேம்படுத்தப்பட்டது. மேலும், முற்பணக் கொடுப்பனவு நியதிகளில் பொருட்களின் இறக்குமதி மீது இலங்கை சுங்கத்தின் ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் பொறிமுறைகள் நெறிப்படுத்தப்பட்டு, தற்போதைய சர்வதேச கொடுக்கல்வாங்கல்களின் கண்காணிப்பை மேம்படுத்தியது. அதேவேளை, வெளிநாட்டுச் செலாவணிச் சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கில், வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தினை திருத்தும் செயல்முறையில் மத்திய வங்கி தொடர்ந்தும் ஈடுபட்டது.

3

### இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தல்

**அரசாங்கமானது, மத்திய வங்கியுடன் ஆலோசித்து, 2025இல் வாகன இறக்குமதி மீதான கட்டுப்பாடுகள் உள்ளடங்கலாக அனைத்து இறக்குமதி கட்டுப்பாடுகளையும் முழுமையாக நீக்கியது.** மோட்டார் வாகன இறக்குமதி கட்டுப்பாடுகளின் தளர்த்தலானது, 2024 செத்தெம்பரில் அமைச்சரவையின் ஒப்புதல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து கட்டம்-கட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன்படி, முதல் கட்டமாக 2024 திசெம்பரில் பொதுப் பயணிகள் போக்குவரத்து வாகனங்கள், சிறப்பு நோக்கமுடைய வாகனங்கள் மற்றும் மோட்டார் அல்லாத பொருட்கள் என்பவற்றினை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, 2025 சனவரியில் வணிக மற்றும் பொருட்களை கொண்டுசெல்கின்ற போக்குவரத்து வாகனங்கள் மற்றும் தனிப்பட்ட மோட்டார் வாகனங்கள் என்பவற்றின் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, வெளிநாட்டு செலாவணி வரையறைகளுக்கு மத்தியில் சுமார் ஐந்து ஆண்டுகளாக நடைமுறையிலிருந்த வாகன இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளை காத்திரமான வகையில் முடிவுக்கு கொண்டுவந்தன. இதன் விளைவாக, 2025இல் மோட்டார் வாகன இறக்குமதியில் ஏற்பட்ட அதிகரிப்பினால் தூண்டப்பட்டு, இறக்குமதிச் செலவினம் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தமையானது, நீண்டகால கட்டுப்பாட்டு காலப்பகுதியினைத் தொடர்ந்து எதிர்பார்க்கப்பட்ட கேள்வியின் அதிகரிப்பினை மிதப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் பல்வேறு தீர்வை மற்றும் தீர்வையல்லாத வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அது வர்த்தகப் பற்றாக்குறையை விரிவடைய செய்தது. எனினும், மோட்டார் வாகன இறக்குமதியிலிருந்தான அரசாங்க வருமானம் எதிர்பார்க்கைகளை விஞ்சி, ஒட்டுமொத்த அரசிறை நிலுவையிலும் குறிப்பிடத்தக்களவு மேம்பாட்டினை விளைவித்தது.

## 3.4 நிதியியல் துறைக் கொள்கை வழிமுறைகள்

### பேரண்ட முன்மதியுடைய கொள்கைகள்

**பேரண்ட முன்மதியுடைய அதிகாரசபையாக, நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்குந்தன்மையையும் உறுதிப்பாட்டையும் வலுப்படுத்தும் நோக்கில் பேரண்ட முன்மதியுடைய கொள்கைகளை வகுத்து நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம் மத்திய வங்கிக்கு உரித்தளிக்கப்பட்டுள்ளது.** அதன்படி, முறைமையியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த நிதியியல் துறை பங்கேற்பாளர்கள் மீது மேம்பட்ட பேரண்ட முன்மதியுடைய மேற்பார்வையை பின்பற்றி பிரயோகிப்பதோடு, நிதியியல் முறைமையின் உறுதிப்பாட்டிற்கு அச்சுறுத்தல் விளைவிக்கும் முறைமைசார் இடர்நேர்வுகளை அடையாளம் காணவும், மதிப்பீடு செய்யவும், தணிக்கவும், தொடர்ச்சியாக கண்காணிக்கவும் முன்கூட்டிய வழிமுறைகளை மேற்கொள்ள மத்திய வங்கிக்கு பொறுப்பாணையளிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னணியில், 2025 காலப்பகுதியில் மத்திய வங்கியானது, உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளைக் குறித்துரைப்பதற்கான கட்டமைப்பை மீளாய்வு செய்து வெளியிட்டது. அதன்படி, 2025 ஏப்பிறலில் ஐந்து உரிமம்பெற்ற வங்கிகள் உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளாக குறித்துரைக்கப்பட்டன. இவ்வங்கிகள், பாதகமான அதிர்வுகளுக்கான தமது தாக்குப்பிடிக்குந்தன்மையை மேம்படுத்துவதற்காக மேலதிக மூலதன மிகையொன்றினை பேணுவதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளன. இம்மேலதிக மூலதன தாங்கியிருப்புக்கள், உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளின் இழப்புக்களை ஈர்க்கும் இயலளவினை அதிகரித்து, இதன் மூலம் முறைமையியல் தடைகள் ஏற்படும் சாத்தியப்பாட்டினைக் குறைக்கின்றது. மேலும், மத்திய வங்கியானது, உள்நாட்டு முறைமையியல் ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த வங்கிகளிலிருந்து தோற்றம்பெறுகின்ற இடர்நேர்வுகளையும் பாதிக்கப்படும் தன்மைகளையும் அடையாளம் காண்பதற்கும், ஒட்டுமொத்த நிதியியல் முறைமை உறுதிப்பாட்டினை பாதுகாக்கும் நோக்கில் கொள்கை பரிந்துரைகளை வகுப்பதற்கும், இடர்நேர்வு மதிப்பீடுகளை நடாத்துகின்றது.

**2025 யூலையில், மோட்டார் வாகனங்கள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளின் பெறுமதிக்கான கடன் உச்சவரம்புகளுக்கான திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.** இத்திருத்தமானது, பேரண்ட முன்மதியுடைய கொள்கை கருவியாக பேரண்ட முன்மதியுடைய குறிக்கோள்களுடன் அதன் ஏக பிரயோகத்தினை அணிசேர்ப்பதன் மூலம், பெறுமதிக்கான கடன் உச்சவரம்புகளின் செயல்திறன்மிக்கத்தன்மையை மேம்படுத்துவதை நோக்காக கொண்டுள்ளது. மேலும், உரிமம்பெற்ற

வங்கிகளாலும் நிதிக் கம்பனிகளாலும் மோட்டார் வாகனங்கள் தொடர்பில் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, 2025 நவெம்பரில், பதிவு செய்யப்படாத சிலவகை மற்றும் இலங்கையில் ஒரு ஆண்டிற்குக் குறைவாக பயன்படுத்தப்பட்ட பதிவு செய்யப்பட்ட வாகனங்களுக்கும் பெறுமதிக்கான கடன் வரம்புகளை மத்திய வங்கி மேலும் இறுக்கப்படுத்தியது. இக்கொள்கையானது, மோட்டார் வாகன நிதியிடலுக்காக வழங்கப்படும் கொடுகடன் விரிவாக்கத்தினை மெதுவடையச் செய்து, அதன் மூலம் உயர்வான கொடுகடன் வளர்ச்சியுடன் தொடர்புடைய முறைமைசார் இடர்நேர்வு கட்டியெழுப்பப்படும் சாத்தியப்பாட்டினை தணிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## உரிமம்பெற்ற வங்கிகளுடன் தொடர்புபட்ட கொள்கைகள்

**மத்திய வங்கியானது, 2025 காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் தாக்குப்பிடிக்குந்தன்மையை மீளவலுப்படுத்துவதற்காக பல்வேறு முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தல்களை வெளியிட்டு கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்தி, இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் இணங்குவிப்பினை வலுப்படுத்திய அதேவேளை, உரிமம்பெற்ற வங்கிகள் முழுவதிலும் சிறந்த ஆளுகை நடைமுறைகளை ஊக்குவித்தது.** 2025இல், உரிமம்பெற்ற வங்கிகளின் தொழில்நுட்ப இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தாக்குப்பிடிக்குந்தன்மையை மேம்படுத்துதலானது மத்திய வங்கியின் முக்கிய கவனம் செலுத்தப்பட்ட விடயப்பரப்புக்களிலொன்றாக இருந்தது. அதன்படி, 2025இன் முதலரையாண்டுக் காலப்பகுதியில், டிஜிட்டல் கட்டமைப்பின் மீதான தங்கியிருப்பு வளர்ந்து வருகின்றமைக்கும் தொடர்புடைய இடர்நேர்வுகளுக்கும் மத்தியில், உரிமம்பெற்ற வங்கிகளின் தொழிற்பாட்டுசார் தாக்குப்பிடிக்குந்தன்மையை வலுப்படுத்தும் நோக்கில், தகவல் தொழில்நுட்பம் மற்றும் இணையப் பாதுகாப்புச் சம்பவங்களுக்கான அறிக்கையிடல் தேவைப்பாடுகளை மேம்படுத்துவதற்காக, "உரிமம்பெற்ற வங்கிகளுக்கான தொழில்நுட்பவியல்சார் இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் தாக்குப்பிடிக்குந்தன்மை என்பன குறித்த ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு" மீதான 2021ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க வங்கித்தொழில் சட்ட பணிப்புரைக்கு மேலதிகமாக "உரிமம்பெற்ற வங்கிகளின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் இணையப் பாதுகாப்புச் சம்பவங்களை அறிக்கையிடல்" மீதான 2025ஆம் ஆண்டின் 02ஆம் இலக்கச் சுற்றறிக்கையானது வெளியிடப்பட்டது. வங்கித்தொழில் துறையின் உறுதிப்பாட்டையும் தாக்குப்பிடிக்குந்தன்மையையும் வலுப்படுத்துவதற்காக, 2025 செத்தெம்பரில், 2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்துடன் இசைந்து செல்லும் வகையில், வங்கியின் தன்மை, அளவு, கட்டமைப்பு, சிக்கல்தன்மை மற்றும் இடைத்தொடர்புத்தன்மை என்பவற்றைக் கருத்தில் கொண்டு, மீட்புத் திட்டங்களை தயாரிக்கவும், அவை தயாரித்து முடிவடைந்ததும் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட மீட்புத் திட்டங்களை மத்திய வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு அறிவிக்கும் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன. மேலும், 2025 திசெம்பரில், மத்திய வங்கியானது, டித்வா புயல் மற்றும் வெள்ளத்துடன் தொடர்புடைய அனர்த்தங்களினால் வருமானம் அல்லது வியாபாரம் நேரடியாக பாதிக்கப்பட்ட தனிநபர்களுக்கும் வியாபாரங்களிற்கும் நிவாரண நடவடிக்கைகளை வழங்கக் கோரி அனைத்து உரிமம்பெற்ற வங்கிகளுக்கும் "அண்மைய புயல் மற்றும் வெள்ள அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட தனிநபர்களுக்கும் வியாபாரங்களுக்கும் உதவுவதற்கான நிவாரண நடவடிக்கைகள்" மீதான 2025ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க சுற்றறிக்கையை வெளியிட்டது. அதன்படி, பாதிக்கப்பட்ட தனிநபர்களும் வியாபாரங்களும் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளதுடன், இச்சுற்றறிக்கையின் கீழ் வழங்கப்பட்ட நிவாரண வழிமுறைகளையும் அணுக முடியும். மேலும், மூலதன மட்டங்களை வலுப்படுத்துவதையும், ஒத்திசைவினூடாக தொழிற்பாட்டுசார் திறன்களை மேம்படுத்துவதையும், இடர்நேர்வுகளை பன்முகப்படுத்துவதையும், தொழில்நுட்பத்தினால் தூண்டப்பட்ட வங்கிகளின் நிதியியல் சேவைகளை முன்னேற்றுவதையும் குறிக்கோள்களாக கொண்டு, உரிமம்பெற்ற வங்கிகளை ஒருங்கிணைப்பதற்கு வசதியளிக்கும் கட்டமைப்பொன்று உருவாக்கப்பட்டது. மேற்குறிப்பிடப்பட்டவற்றிற்கு மேலதிகமாக, மத்திய வங்கியானது, வங்கித்தொழில் முறைமையின் சுமூகமான தொழிற்பாட்டினை உறுதி செய்வதற்கு, 2025 காலப்பகுதியில் பல்வேறு ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளை அறிமுகப்படுத்தியது. இவ்வொழுங்குமுறைப்படுத்தல்களானவை, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கான நிவாரண நடவடிக்கைகளின் நடைமுறைப்படுத்தலை மேம்படுத்தும் பிற்சேர்க்கை; அக்கறை முரண்பாடுகளை தணிப்பதற்கு முக்கிய சபைத் தீர்மானங்களில்

பங்குடைமையாளர்களால் நியமிக்கப்பட்ட சில பணிப்பாளர்களின் பங்கேற்பினை மட்டுப்படுத்துவதன் மூலம் நிறுவன ஆளுகையை வலுப்படுத்தும் பிற்சேர்க்கை; அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரசுக்குரித்தான தொழில் முயற்சிகள் என்பவற்றின் சார்பில் உரிமம்பெற்ற வங்கிகளால் நாணயக்கடிதங்கள் திறக்கப்படுவதற்காக, பொதுத் திறைசேரியினால் வழங்கப்படும் உத்தரவாதக் கடிதத்தை அங்கீகரிக்கப்பட்ட பிணையமொன்றாக குறிப்பீடு செய்வதன் மூலம், தொடர்புடைய தரப்பினருக்கான இடமளித்தல் மீதான ஒழுங்குமுறைப்படுத்தல்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய அறிக்கையிடல் தேவைப்பாடுகள் என்பவற்றின் மீதான திருத்தங்கள்; நடமாடும் அலகுகளினூடாக வங்கித்தொழில் சேவைகளை வழங்குவதற்கான திருத்தப்பட்ட ஒப்புதல் தேவைப்பாடுகளை விளக்கும் சுற்றறிக்கை மற்றும் சொத்துகளின் அளவை அடிப்படையாகக் கொண்டு உரிமம்பெற்ற வங்கிகளுக்கான வருடாந்த அனுமதிப் பத்திர கட்டண அமைப்பை குறிப்பீடுசெய்யும் வங்கித்தொழில்துறை சட்ட நிர்ணயம் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

## நிதிக் கம்பனிகள், உரிமம்பெற்ற நுண்பாக நிதிக் கம்பனிகள் மற்றும் முதனிலை வணிகர் கம்பனிகள் தொடர்பான கொள்கைகள்

**சந்தை அபிவிருத்திகளுடனும் பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுடனும் இசைந்து செல்லும் வகையில் நிதிக் கம்பனிகளின் இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளை மேம்படுத்தும் நோக்குடன், மத்திய வங்கியானது நிதிக் கம்பனிகளின் திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பு மீதான பணிப்புரைகளை வெளியிட்டது.** இப்பணிப்புரைகள், இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதற்கும், அளவீடு செய்வதற்கும், கண்காணிப்பதற்கும், கட்டுப்படுத்துவதற்குமான பொருத்தமான இடர்நேர்வு முகாமைத்துவ உபாயங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், ஆளுகைக் கட்டமைப்புகள் மற்றும் முறைமைகள் என்பவற்றை வகுத்தல் உள்ளடங்கலாக திரவத்தன்மை இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பின் முக்கிய கூறுகள் மீது கவனம் செலுத்துமாறு கம்பனிகளை தேவைப்படுத்துகின்றன. **நிதிக் கம்பனிகளால் வைப்புக்கள் பெறப்படும் போது மற்றும் படுகடன் சாதனங்கள் வழங்கப்படும் போது நிலைபெறத்தக்க வியாபார நடைமுறைகளை ஊக்குவிப்பதற்காக, நிதிக் கம்பனிகளால் வழங்கப்படும் அல்லது செலுத்தப்படும் வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான அதிகபட்ச வட்டி வீதங்களை நிர்ணயிப்பதற்கான முறையியலை, வழங்கும் வைப்புக்கள் மற்றும் படுகடன் சாதனங்கள் மீதான அதிகபட்ச வட்டி வீதங்கள் பற்றிய பணிப்புரையொன்று வெளியிடப்பட்டது.** மேலும், பொதுமக்களிடமிருந்தும் ஆர்வலர்களிடமிருந்தும் அவதானங்களை/கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்காக 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித் தொழில் சட்டத்தின் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் மீதான ஆலோசனைப் பத்திரமொன்று வெளியிடப்பட்டது. சட்டத்திற்கான முன்மொழியப்பட்ட திருத்தங்கள், நிதிக் கம்பனிகள் துறையின் உறுதிப்பாட்டினை வலுப்படுத்துவதற்காக வலுவான ஒழுங்குமுறைப்படுத்தல்களை அறிமுகப்படுத்துவதையும், பொதுமக்களின் நலனுக்காக நிதிக் கம்பனிகளின் வெளிப்படைத்தன்மையை அதிகரிப்பதையும், வளம்பெற முடியாத நிதிக் கம்பனிகளை தீர்மானிப்பதிற்குட்படுத்தவும் முடிவுறுத்துவதற்கும் முறைசார் கட்டமைப்பினை நிறுவுவதையும், அதிகாரமளிக்கப்படாத வைப்பினை ஏற்கும் நடவடிக்கைகளின் விசாரணை மற்றும் வழக்குத் தொடுத்தல் மீதான மத்திய வங்கியின் அதிகாரங்களை மேம்படுத்துவதையும் முக்கிய நோக்காகக் கொண்டுள்ளது.

**2024 திசெம்பரில் நிதிக் கம்பனிகளை ஒன்றிணைக்கும் முதன்மைத் திட்டத்தின் கட்டம் II இற்கான திருத்தப்பட்ட கட்டமைப்பின் அறிமுகத்தோடு, மத்திய வங்கியானது நிதிக் கம்பனிகளின் அடையப்பட்ட புள்ளிகளினை (அறிக்கையிடப்பட்ட தரவுகளுக்கு குறித்தொதுக்கப்பட்டது) அடிப்படையாக் கொண்டு அவற்றின் காலாந்தர கண்காணிப்பினை தொடங்கியது.** முதன்மைத் திட்டத்தின் கட்டம் II 2025 மாச்சு 31 தொடக்கம் 2028 மாச்சு 31 வரையான மூன்று ஆண்டுகால நிறைவேற்றுக் காலத்துடன் அதிக தாக்குப்பிடிக்குந்தன்மைக் கொண்ட நிதிக் கம்பனிகள் துறையொன்றினை உருவாக்குவதை நோக்காகக் கொண்டுள்ளது. மேம்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு பதிலிறுத்தும் வகையில் நிதிக் கம்பனிகளால் நடைமுறைப்படுத்தப்பட்ட வழிமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் தொடர்ச்சியாக

பரீட்சிப்பதன் மூலம் நிதியியல் நிறுவனங்களின் ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வை மேலும் வலுப்படுத்தப்பட்ட அதேவேளை, இடர்நேர்வு அடிப்படையிலான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை தடுத்தல் மேற்பார்வை செயல்முறையும் மேம்படுத்தப்பட்டது. இரு நிதிக் கம்பனிகளுக்கு விதிக்கப்பட்ட வைப்பு, கடன்வழங்கல் மற்றும் கடன்பாடுகள் மீதான மட்டுப்பாடுகள், தொடர்புடைய முன்மதியுடைய பணிப்புரைகளுக்கு அந்நிறுவனங்கள் இணங்கியொழுகியதனைக் கருத்தில் கொண்டு நீக்கப்பட்டன. மேலும், 2025 காலப்பகுதியில், தொடர்ச்சியாக 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறி/மறுத்து வந்த நிதி கம்பனியொன்றின் மீது தீர்மான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதுடன் கம்பனிக்கு நிர்வாகியொருவரும் நியமிக்கப்பட்டார்.

**முறிவடைந்த நிதிக் கம்பனிகளுடன் தொடர்புடைய முடிவுறுத்தும் வழிமுறைகள் முன்னெடுக்கப்பட்டு, முடிவுறுத்தும் செயல்முறையை துரிதப்படுத்துவதற்கு அத்தகைய கம்பனிகளின் முடிவுறுத்துனர்களுடன் பல்வேறு கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.** மத்திய வங்கிக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் மற்றும் தகவல்களின் அடிப்படையில், அதிகாரமளிக்கப்படாத வைப்பினை ஏற்றல் மற்றும் நிதித்தொழில்கள் என்பவற்றிற்கெதிராக பல்வேறு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 2025 காலப்பகுதியில், சில நிறுவனங்கள் அதிகாரமளிக்கப்படாத நிதித்தொழில்கள்/வைப்பினை ஏற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

**மத்திய வங்கியானது, இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளை மேம்படுத்தும் நோக்கில், நுண்பாக நிதிக் கம்பனிகளின் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ கட்டமைப்பு மீதான பணிப்புரைகளை வெளியிட்டது.** மேலும், முதனிலை வணிகர் கம்பனிகள் துறையின் தாக்குப்பிடிக்குந்தன்மையை வலுப்படுத்துவதற்காக, சாத்தியமான இடர்நேர்வுகளையும் எதிர்பாராத இழப்புகளையும் உள்ளீர்ப்பதற்கு போதுமான நிதியியல் தாங்கியிருப்பை பேணுவதற்கு கம்பனிகளை தேவைப்படுத்தி, குறைந்தபட்ச மைய மூலதனத் தேவைப்பாடுகள் மீதான பணிப்புரையும் வெளியிடப்பட்டது.

## பொதுப் படுகடன் முகாமைத்துவக் கொள்கைகள்

**அரசாங்கத்தின் முகவரொன்றாக முன்னர் இலங்கை மத்திய வங்கி மேற்கொண்ட பொதுப்படுகடன் முகாமைத்துவத் தொழிற்பாடானது, 2025 திசெம்பரில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்திற்கு மாற்றப்பட்டது.** நிறுவனம்சார் பொறுப்புக்கூறுந்தன்மையை வலுப்படுத்துவதையும், இலங்கையின் படுகடன் முகாமைத்துவக் கட்டமைப்பின் செயல்திறனையும் வெளிப்படைத்தன்மையையும் மேம்படுத்துவதையும் நோக்காகக் கொண்டு, 2024ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தின் கீழ், பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் நிறுவப்பட்டதுடன், 2025 திசெம்பரில் முழுமையாக தொழிற்படுத்தப்பட்டது. 1950 முதல் மத்திய வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களத்தினால் புரியப்பட்ட பொதுப் படுகடன் முகாமைத்துவ முகவர் தொழிற்பாடு நிறுத்தப்பட்டுள்ளதுடன், மத்திய வங்கியின் நாணயக் கொள்கை உருவாக்கத்திற்கான நிறுவனம்சார் கட்டமைப்பானது மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. பொதுப் படுகடன் முகாமைத்துவச் சட்டத்தினதும் இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தினதும் தொடர்புடைய ஏற்பாடுகளின் கீழ், மத்திய வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறைமையினதும் அரசாங்க பிணையங்களுக்கான மத்திய வைப்பக முறைமையினதும் தொழிற்பாடுகளும், மத்திய வங்கியின் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களத்திற்கு உரித்தளிக்கப்பட்டுள்ளது. இந்நிலைமாற்றத்தினை வசதிப்படுத்துவதற்காக, பொதுப் படுகடன் திணைக்களமானது, பொதுப் படுகடன் முகாமைத்துவ சட்டத்தின் வரைவுக் கட்டத்திலிருந்து பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் முழுமையாக செயல்படுத்தப்படும் வரை, நிதி அமைச்சுக்கும் பல்தரப்பு முகவராண்மைகளுக்கும் தொழில்நுட்ப உள்ளீடுகளையும், ஆலோசனைகளையும், இயலளவினைக் கட்டியெழுப்புவதற்கான ஆதரவினையும் வழங்கியது. இதன் பின்னணியில், பொதுப் படுகடன் திணைக்களமானது, 2025இல் பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகத்தின் அலுவலர்களுக்கு பணியிட பயிற்சியையும் அறிவினைப் பரிமாற்றும் அமர்வுகளையும் நடாத்தியது. மேலும், 2025 ஒத்தோபர்

3

முதல், பொதுப் படுகடன் முகாமைத்துவ அலுவலகம் முழுமையாக செயல்படுத்தப்படும் வரையான நிலைமாற்றக் காலப்பகுதியில், குறித்துரைக்கப்பட்ட அலுவலர்கள் மத்திய வங்கி வளாகத்தில் தொடர்புடைய படுகடன் முகாமைத்துவ தொழிற்பாடுகளைப் புரிந்தனர். நிலைமாற்றக் காலம் முழுவதும், மத்திய வங்கியானது, சாத்தியமான சந்தை இடையூறுகளை தணிப்பதற்காக சந்தை பங்கேற்பாளர்களுடன் கிரமமான மற்றும் வெளிப்படையான தொடர்பூட்டலை பேணியது.

3

## நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கொள்கைகள்

**2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, இலங்கை மத்திய வங்கிச் சட்டம் இயற்றப்பட்டதற்கமைவாக, இலங்கையில் நிதியியல் வசதிக்குட்படுத்தலின் ஊக்குவிப்பானது மத்திய வங்கியின் தொழிற்பாடொன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.** அதன்படி, மத்திய வங்கியானது 2025இல் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் நடைமுறைப்படுத்தலை தொடர்ச்சியாக முன்னேற்றியது. 2024இன் இறுதியில், தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் கட்டம் I (2021-2024) நிறைவு செய்யப்பட்டதன் பின்னர், முன்னேற்றத்தினையும் எதிர்கால கொள்கை பணிப்புரைகளுக்கான முக்கிய பாடங்களையும் மதிப்பீடு செய்வதற்காக இறுதி கால மதிப்பீடொன்று நடாத்தப்பட்டு வருகின்றது. இதற்கு நிகராக, நாட்டில் நிதியியல் வசதிக்குட்படுத்தலின் நிலை மீதான இற்றைப்படுத்தப்பட்டதும் அனைத்தையுமுள்ளடக்கியதுமான தரவுகளை உருவாக்குவதற்காக நிதியியல் வசதிக்குட்படுத்தல் கூட்டமைப்பின் ஆதரவுடன் தேசிய மட்ட நிதியியல் வசதிக்குட்படுத்தல் அளவீடொன்றினை நடாத்துவதற்கான வழிமுறைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இம்முயற்சிகள் முக்கிய ஆர்வலர்களின் பங்கேற்புடனான ஆலோசனைச் செயல்முறையினூடாக, 2026இன் இரண்டாம் அரையாண்டிற்காக திட்டமிடப்பட்டுள்ள தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் கட்டம் II இன் வகுத்தலிற்கான தகவல்களை வழங்கும் என எதிர்பாாக்கப்படுகின்றது. உரிய ஆர்வலர்களுடன் இணைந்து தொடர்புடைய கொள்கை நடவடிக்கைகளின் நடைமுறைப்படுத்தலினை இயக்குவதற்கு முதன்மை பொறுப்பு இலங்கை மத்திய வங்கியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிதியியல் அறிவு மற்றும் இயலாற்றலைக் கட்டியெழுப்பலானது, தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் நான்கு உபாய ரீதியான தூண்களில் ஒன்றாக அமைகின்றது. அதற்கமைய, இலங்கையின் நிதியியல் அறிவு வழிகாட்டல் (2024-2028) தொடங்கிவைக்கப்பட்டதுடன், அதற்கான நடவடிக்கைத் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இம்முயற்சியின் பாகமொன்றாக, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் நிதியியல் ஆதரவுடன் நிதியியல் ரீதியான அறிவினைக் கொண்டதும் வலுவூட்டப்பட்டதுமான சமூகமொன்றினை பேணி வளர்ப்பதை நோக்காக கொண்டு இலக்கிடப்பட்ட நிதியியல்சார் கல்வி முன்னெடுப்புக்களை வடிவமைத்து வழங்குவதில் உபாய ரீதியான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கும், அறிவுப் பரிமாற்றத்தை ஊக்குவிப்பதற்கும், கல்விசார் நிபுணத்துவத்தை பயன்படுத்துவதற்கும் மத்திய வங்கி கல்வியாளர்களுடன் இணைந்து செயற்பட்டது.

## கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு தொடர்பான கொள்கைகள்

**மத்திய வங்கியானது, 2025இல், டிஜிட்டல் கொடுப்பனவுகளின் தழுவுதலை ஊக்குவிப்பதற்கு பல்வேறு கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்திய அதேவேளை கொடுப்பனவு முறைமையின் செயல்திறன்மிக்கத்தன்மையையும் உறுதிப்பாட்டையும் மேம்படுத்தியது.** டிஜிட்டல் கொடுப்பனவு சேவைகளின், குறிப்பாக உடனடி கணக்கிலிருந்து கணக்கிற்கான கொடுப்பனவுகளின் வசதியினையும் அணுகலையும் மேம்படுத்துவதற்காக, அனைத்து பொதுவான இலத்திரனியல் நிதிய மாற்றல் ஆளி அடிப்படையிலான தளங்களுக்கான கொடுக்கல்வாங்கலொன்றிற்கான உயர்ந்தபட்சக் கட்டணம் குறைக்கப்பட்டன. இதன்படி, வாடிக்கையாளர் உடனடி நிதிய மாற்றலிற்கான உச்ச கட்டணம் ரூ. 25ஆக வரம்பிடப்பட்டிருந்தது. வங்கி கணக்கு அடிப்படையிலான அரசாங்க நிறுவனங்களுக்கான உடனடி கொடுப்பனவுகளை ஊக்குவிப்பதற்காக, கவ்பே[2] ஊடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களிற்கான கட்டணம் ரூ. 15ஆக நிர்ணயிக்கப்பட்ட அதேவேளை, வரிகள் மற்றும் சுங்கத் தீர்வைகள் போன்ற கொடுப்பனவுகளை வசதிப்படுத்தும் லங்காபே இணையவழி கொடுப்பனவுத் தளத்தினூடாக மேற்கொள்ளப்படும் கொடுக்கல்வாங்கல்களுக்கான உயர்ந்தபட்சக் கட்டணம் ரூ. 50இலிருந்து ரூ. 25ஆக குறைக்கப்பட்டது. டிஜிட்டல் வழிகளின்

2 2025 பெப்புருவரியில் அறிமுகப்படுத்தப்பட்ட கவ்பே, உடனடி டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களை ஏற்றுக்கொள்ள ஒதுக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப முறைமைகளற்ற அரசாங்க நிறுவனங்களை இயலுமைப்படுத்தும் தளமொன்றாகும்.

மூலம் பாரிய பெறுமதி கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்தவும், பரிணமித்து வரும் கொடுக்கல்வாங்கல் தேவைப்பாடுகளுக்கு இடமளிக்கவும், தொகுதி அடிப்படையில் ஒத்திவைக்கப்பட்ட தீர்ப்பனவுகளை செயற்படுத்தும் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையினூடாக வாடிக்கையாளரால் முன்னெடுக்கப்படும் நிதிய மாற்றங்களுக்கான கொடுக்கல்வாங்கலொன்றிற்கான உயர்ந்தபட்சப் பெறுமதி ரூ. 5 மில்லியனில் இருந்து ரூ. 10 மில்லியனாக உயர்த்தப்பட்டது. அரசாங்கத் துறை விரைவாக டிஜிட்டல் கொடுப்பனவுகளை தழுவியதால், மத்திய வங்கியில் பேணப்படும் கணக்குகளின் மூலம் இலங்கை வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையினூடான செயலாக்கப்படும் அரசாங்கத்துடன் தொடர்புடைய கொடுக்கல்வாங்கல்களுக்கான அதிகபட்ச வரையறையாக ரூ. 50 மில்லியன் வழங்கப்பட்டது.

**லங்காகியூஆர் இன் உலகளாவிய இணைப்பினை அதிகரிக்கும் கொள்கையை தொடர்வதற்கும், வருகை தரும் பயணிகளுக்கான கொடுப்பனவு சௌகரியத்தினை மேம்படுத்துவதற்கும், லங்காபே (பிரைவட்) லிமிடெட், அலிபே சிங்கப்பூர் ஈ-கொமர்ஸ் பிரைவட் லிமிடெட்டுடன் பங்காளராவதற்கு அனுமதி வழங்கப்பட்டு, லங்காகியூஆர் வணிக நிலையங்களில் அலிபே இயலுமைப்படுத்தப்பட்ட செயலிகளை பயன்படுத்துவதற்கு சுற்றுலாப் பயணிகளை இயலுமைப்படுத்தியது.** இப்பங்குடைமையானது, இந்தியாவின் ஒருமுகப்படுத்தப்பட்ட கொடுப்பனவு இடைமுகம் இயலுமைப்படுத்தப்பட்ட செயலிகளிலிருந்து பல ஆசிய நாடுகளில் கிடைக்கக்கூடியதாகவிருக்கும் அலிபே செயலிகள் வரை லங்காகியூஆர் இன் ஒருங்கிணைப்பினை விரிவுபடுத்தியது.

**மத்திய வங்கியானது தேசிய கொடுப்பனவுகள் சபையுடன் இணைந்து, வசதிக்குட்படுத்தல், வினைத்திறன்மிக்கத்தன்மை, பாதுகாப்பு மற்றும் உலகளாவிய இணைப்பு என்பவற்றை ஊக்குவிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஆறு உபாய ரீதியான தூண்களின் மீது கட்டியெழுப்பப்பட்ட தேசிய கொடுப்பனவு முறைமை வழிகாட்டல் 2026-2027இனை உருவாக்கியது.** இவ்வழிகாட்டலானது, டிஜிட்டல் கொடுப்பனவுகளிற்கான எதிர்கால கேள்வியைப் பூர்த்தி செய்வதற்கு இலங்கையின் கொடுப்பனவு முறைமையை விரிவுபடுத்தி தரமுயர்த்துவதற்கான உபாய ரீதியான நெறிப்படுத்தல்களை வழங்கும்.

**மேற்குறிப்பிடப்பட்டதற்கு மேலதிகமாக, வெளிநாட்டு பணப் பரிமாற்றல் சேவை வழங்குநர்களை உள்ளடக்குவதற்காக ஒழுங்குமுறைப்படுத்தல் பரப்பானது விரிவுப்படுத்தப்பட்டு மேற்பார்வை கண்காணிப்பானது மேம்படுத்தப்பட்டதோடு, பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்களின் ஒழுங்குவிதிகள் திருத்தப்பட்டன.** மேலும், 2025 ஆண்டுக்காலப்பகுதியில், நிதியியல் சந்தை உட்கட்டமைப்பின் கொள்கைகளுடன் இசைந்து செல்லும் வகையில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு உட்கட்டமைப்பை நிருவகிக்கும் சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பினை வலுப்படுத்துவதை நோக்காகக் கொண்டு, இலங்கை மத்திய வங்கியானது புதியதொரு கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்ட வகுத்தலில் ஈடுபட்டது.

3

## பணம் தூயதாக்கலுக்கெதிரான, பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் மற்றும் ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் தொடர்பான கொள்கைகள்

**இலங்கையின் நிதியியல் உளவறிதல் பிரிவானது, 2025இல், மேம்பட்ட நுண்ணறிவுசார் தலைமுறை, வலுப்படுத்தப்பட்ட மேற்பார்வை, சட்ட சீர்திருத்தங்கள் மற்றும் உபாய ரீதியான ஒருங்கிணைப்பு என்பவற்றினூடாக, தேசிய பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை தடுத்தல்/ ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தலை தடுத்தல் கட்டமைப்பினைத் தொடர்ச்சியாக வலுப்படுத்தியது.** அதன்படி, நிதியியல் உளவறிதல் பிரிவானது, இலங்கையின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை தடுத்தல்/ ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தலை தடுத்தல் முறைமையை வலுப்படுத்தும் நோக்கிலும், பணம் தூயதாக்கல் மீதான 2026இல் ஆசிய பசுபிக் குழுவின் பரஸ்பர மதிப்பீட்டிற்கு இலங்கை நன்கு தயார்நிலையிலிருப்பதை உறுதி செய்வதற்கும் பல கொள்கைகளை நடைமுறைப்படுத்தியது. இத்தயார்படுத்தல்களை கருத்திற்கொண்டு, மத்திய வங்கியின் ஆளுநர் தலைமையிலான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை தடுத்தல் தேசிய ஒருங்கிணைப்புக் குழுவின் வழிகாட்டுதலின் கீழ் பல்வேறு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வழிமுறைகள், பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை தடுத்தல் செயலணியால் ஆர்வலர் வாரியான நடவடிக்கைத் திட்டங்களை தொடர்ச்சியாக கண்காணித்தல் மற்றும் பணம் தூயதாக்கல், பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மற்றும் முதல் முறையாக ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல் என்பவற்றை உள்ளடக்கும் 2024/25 தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டினை நிறைவு செய்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

3

**முக்கிய பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை தடுத்தல் சட்டங்களின் திருத்தங்களுடன், சட்ட சீர்திருத்தங்கள் செயல்முறைப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன.** அதன்படி, 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம், 2006ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க பணம் தூயதாக்குதலை தடுத்தல் சட்டம், மற்றும் 2005ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க பயங்கரவாத நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டம் போன்ற முக்கிய சட்டங்களில் திருத்தங்கள் மேற்கொண்ட அதேவேளை, 2025ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க குற்றச் செயல்களின் வரும்படிகள் சட்டம், 2025ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க கம்பனிகள் (திருத்தம்) சட்டம், 2025ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க பணசூதாட்டத்தை ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டம், இலங்கை நிலையான சொத்து உயர்தொழிலர்கள் நிறுவகச் சட்டம், நம்பிக்கைப் பொறுப்பு (திருத்தங்கள்) சட்டமூலம், அரசுசாரா நிறுவனங்கள் (பதிவு மற்றும் மேற்பார்வை) சட்டமூலம், வெளிநாட்டு தீவிரவாத போராளிகள் சட்டமூலம் உள்ளடங்கலாக புதிய சட்ட இயற்றங்களுக்கான தொழில்நுட்ப பங்களிப்புகளும் வழங்கப்பட்டன. மேலும், நிதியியல் உளவறிதல் பிரிவானது, 2006ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்திற்கான எதிர்வரவுள்ள திருத்தங்களால் ஆதரவளிக்கப்பட்டு, மெய்நிகர்ச் சொத்துகளுக்கும் மெய்நிகர்ச் சொத்துச் சேவை வழங்குநர்களுக்கும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை தடுத்தல்/ ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தலை தடுத்தல் மேற்பார்வை கட்டமைப்பை தற்போது கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்தி வரும் அதேவேளை, மெய்நிகர் சொத்துச்சேவை வழங்குநர்களுக்கான முன்மதியுடைய ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளை கண்டறிவதற்கு டிஜிட்டல் பொருளாதார துணை அமைச்சரின் தலைமையில் துணைக்குழுவொன்றும் நிறுவப்பட்டுள்ளது.

## நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்புக்கான கொள்கைகள்

**மத்திய வங்கியானது, கொள்கை குறைபாடுகளை அடையாளம் காணும் மற்றும் சீர்திருத்த முன்னுரிமைகளை மதிப்பீடு செய்யும் நோக்கில், 2025இன் நான்காம் காலாண்டில் ஏற்கனவேயுள்ள நிதியியல் நுகர்வோர் பாதுகாப்பு கட்டமைப்பின் அனைத்தையுமுள்ளடக்கிய மதிப்பீட்டை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தான தொழில்நுட்ப உதவியுடன் ஆரம்பித்தது.** இம்மீளாய்வானது, தற்போதைய கட்டமைப்பை பன்னாட்டு சிறந்த நடைமுறைகளுக்கெதிராக ஒப்பிட்டு மதிப்பிடுவதையும், சட்ட கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கும், ஒழுங்குமுறைப்படுத்தலை மேம்படுத்துவதற்கும், நிறுவனசார் வலுப்படுத்தலுக்கும் மற்றும் மேற்பார்வையின் செயல்திறன்மிக்கத்தன்மையை மேம்படுத்துவதற்கான பகுதிகளை அடையாளம் காண்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், மத்திய வங்கியானது, 2026இல் ஆர்வலர் ஆலோசனைகளை நிறைவு செய்து, நிதியியல் நுகர்வோர் பாதுகாப்பு கொள்கை கட்டமைப்பினை இற்றைப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.

**நிறுவனம்சார் இயலளவை மேலும் வலுப்படுத்தும் விதமாக, மத்திய வங்கியானது, 2025இல் சர்வதேச நிதியியல் நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பின் முழு அங்கத்தவரானது.** இவ்வுறுப்புரிமையானது, அறிவு பரிமாற்றத்தை மேம்படுத்தி, உலகளாவிய சிறந்த நடைமுறைகளுக்கான அணுகலை வசதிப்படுத்தி, மத்திய வங்கியினுள் தொடர்ச்சியான கொள்கை அபிவிருத்திக்கு ஆதரவளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## வைப்புக் காப்புறுதி மற்றும் நிதியியல் நிறுவனங்களின் தீர்மானம் மீதான கொள்கைகள்

**2025இல், மத்திய வங்கியானது, நிதியியல் முறைமை முழுவதுமான ஒத்திசைவு, தயார்நிலை மற்றும் செயல்திறன்மிக்க நெருக்கடி முகாமைத்துவம் என்பவற்றை உறுதி செய்வதற்காக, வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளின் தீர்மானங்கள் மீதான அதன்**

**கொள்கை கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்தியது.** அதன்படி, 2023ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் Iஆம் மற்றும் IIஆம் பகுதிகளின் கீழ் தீர்மான ஏற்பாடுகளின் விரிவாக்கமானது முக்கிய கொள்கை அபிவிருத்தியொன்றாக விளங்கி, அச்சட்டத்தின் 57ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்றினூடாக அனைத்து நிதிக் கம்பனிகளுக்கும் வெளியிடப்பட்டது. இவ்வழிமுறையானது, உரிமம்பெற்ற வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகள் ஆகிய இரண்டும் தரப்படுத்தப்பட்ட தீர்மான அமைப்பிற்கு உட்படுவதை உறுதி செய்து, இடர்பாட்டிலுள்ள நிறுவனங்களில் காலந்தவறாத தலையீட்டினையும் அவற்றின் ஒழுங்கான தீர்மானத்தினையும் இயலுமைப்படுத்துகினறது. இவ்விரிவாக்கமானது, வைப்பாளர்களுக்கும் பரந்தளவிலான நிதியியல் முறைமைக்குமான இடர்நேர்வுகள் தணிக்கப்படுவதை மேம்படுத்துகின்றது.

**தீர்மான தயார்நிலையை வலுப்படுத்தும் மத்திய வங்கியின் முயற்சியின் ஒரு பகுதியாக, மத்திய வங்கியானது, (2023ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க வங்கித்தொழில் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 16ஆம் பிரிவின் கீழ்) ஆளுகை சபை அங்கீகரித்த சுயாதீன தொழில்சார் விலைமதிப்பீட்டாளர்கள் குழுமமொன்றினை, 2025 ஓகத்து 06ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அமைத்தது.** இக்குழுமம், உரிய உரிமம்பெற்ற வங்கியின் அல்லது நிதி கம்பனியின் சொத்துகள் மற்றும் பொறுப்புக்களின் சுயாதீன மதிப்பீடு, முறிவடையும் அல்லது முறிவடையக்கூடிய வாய்ப்புள்ள நிலையினை நிர்ணயித்தல், தீர்மான தெரிவுகளின் மதிப்பீடு மற்றும் "தீர்த்துக்கட்டுதலை விடவும் எந்தக் கடன்கொடுநரும் மோசமான நிலைக்கு செல்லக்கூடாது" எனும் பாதுகாப்பு விதியைப் பயன்படுத்துதல் உள்ளடங்கலாக முக்கிய தீர்மான தொழிற்பாடுகளுக்கு ஆதரவளிக்கின்றது. இக்குழுமத்தின் தாபனமானது, நம்பகத்தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் சட்ட ரீதியான வலிமை என்பவற்றினை மேம்படுத்துகின்றது.

**இதற்கு மேலதிகமாக, 2025 காலப்பகுதியில், மத்திய வங்கியானது, "இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்துடனான உறுப்புரிமையையும் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் உறுப்பு நிறுவனங்களுக்கான வைப்புக் காப்புறுதியின் கிடைப்பனவினையும் பிரசன்னப்படுத்தல்" பற்றிய 2025ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க வங்கித்தொழில் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் பணிப்புரையை இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின் உறுப்பு நிறுவனங்களுக்கு வெளியிட்டது.** இப்பணிப்புரையானது, வைப்புக் காப்புறுதி குறித்த பொதுமக்கள் விழிப்புணர்வை மேம்படுத்துவதற்கும், நிதியியல் முறைமையில் வைப்பாளர்களின் நம்பிக்கையை வலுப்படுத்துவதற்குமான மத்திய வங்கியின் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்துடனான அவற்றின் உறுப்புரிமையையும் வைப்புக் காப்புறுதியின் கிடைப்பனவினையும் கட்டாயமாக பிரசன்னப்படுத்துவதையும் தேவைப்படுத்துகின்றது. அதன்படி, உறுப்பு நிறுவனங்கள் அவற்றின் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்ட உறுப்புரிமை நிலையையும் வைப்புக் காப்புறுதி பாதுகாப்புடன் தொடர்புடைய தகவல்களையும் பரிந்துரைக்கப்பட்ட வழிகாட்டுதல்களுடன் இணங்கியொழுகும் வகையில் தெளிவாகவும் முக்கியத்துவம் வாய்ந்த வகையிலும் பிரசன்னப்படுத்த தேவைப்படுத்தப்படுகின்றன.

## நிலைபேறான நிதி மீதான கொள்கைகள்

**பன்னாட்டு நிதியக் கூட்டுத்தாபனத்தின் ஆதரவுடன் உருவாக்கப்பட்ட நிலைபேறான நிதி வழிகாட்டல் 2.0, 2025 மேயில் அறிமுகப்படுத்தப்பட்டு, இலங்கையின் நிதியியல் துறைக்குள் நிலைபேறான நிதியினை முன்னேற்றுவதில் முக்கிய மைல்கல்லொன்றை குறித்துரைக்கின்றது.** நிதியியல் துறை ஆர்வலர்களுடனும் சர்வதேச பங்காளர்களுடனும் மேற்கொண்ட பரந்தளவிலான ஆலோசனைகளினூடாக உருவாக்கப்பட்ட இவ்வழிகாட்டலானது, விலை நிலையுறுதித்தன்மையினையும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டையும் பேணும் இலங்கை மத்திய வங்கியின் பொறுப்பாணையுடன் இசைந்து செல்லும் அதேவேளை, நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் தொழிற்பாடுகளை தேசிய சுற்றுச்சூழல் மற்றும் சமூக அபிவிருத்தி முன்னுரிமைகளுடன் அணிசேர்ப்பதற்கு வழிகாட்டும் வகையில் ஒருங்கிணைக்கப்பட்ட மற்றும் நடைமுறை சார்ந்ததொரு கட்டமைப்பினையும் வழங்குகின்றது. வசதிக்குட்படுத்தலை மேம்படுத்துதல் மற்றும் பரந்தளவிலான பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்தல் என்பவற்றின் மீதான வலுவான முக்கியத்துவத்துடன், நீடித்துநிலைத்திருக்கும்தன்மையின் சமூக பரிமாணத்தின் ஒருங்கிணைப்பானது, வழிகாட்டல் 2.0இன் கீழான

முக்கிய மேம்பாடொன்றாக விளங்குகின்றது. இதற்கு நிகராக, இவ்வழிகாட்டலானது, காலநிலையுடன் தொடர்புடைய நிதியியல் இடர்நேர்வுகளை தீர்ப்பதில் அதிக கவனம் செலுத்தி, இதன் மூலம் காலநிலையினால் தூண்டப்படும் அதிர்வுகளுக்கான நிதியியல் முறைமையின் தாக்குப்பிடிக்குந்தன்மையை வலுப்படுத்துவதுடன், அதிகமானதொரு நிலைபேறான பொருளாதார மாற்றத்திற்கும் ஆதரவளிக்கின்றது. முன்னோக்கி பார்க்கையில், தற்போது பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் ஆதரவுடன் இற்றைப்படுத்தப்பட்டு வரும் ஏற்கனவேயுள்ள பசுமை நிதி வகைப்படுத்தலை மேம்படுத்துவதனூடாக, நிலைபேறான நிதிக்கான இயலுமைப்படுத்தும் கட்டமைப்பினை மேலும் வலுப்படுத்துவதற்கு மத்திய வங்கி திட்டமிட்டுள்ளது. இம்முன்னெடுப்பானது, பரிணமித்து வரும் உலகளாவிய சிறந்த நடைமுறைகளை உள்ளடக்கும் அதேவேளை, தேசிய நிலைபேறான முன்னுரிமைகளுடன் நிதியியல் பாய்ச்சல் அணிசேர்வதனை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், மத்திய வங்கியானது, உரிமம்பெற்ற வங்கிகளின் நிலைபேறான நிதியியல் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருவதுடன், இவ்விடயம் தொடர்பிலான புதிய வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகள் 2026இல் உரிமம்பெற்ற வங்கிகளுக்கு வெளியிடப்படவுள்ளன.